"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்". தை - மாசி - பங்குனி 2000

# கலசம்
# KALASAM



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ் £1.00




தரம்! தெரிவு!! மலிவு!!!

இவையனைத்தையும் மிக மலிவு விலையில் பெற்றிட

**LAKSHMIS JEWELLERS & SILK HOUSE**

**276 High Street North, East Ham E12 6SA**

**Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448**

மணி 8 ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம் ஒலி 29

# கலசம்

KALASAM

தை - மாசி - பங்குனி 2000

## புத்தாயிரமாம் ஆண்டில் நிமிர்வதற்காகக் குனிவோம்!



புதிய ஒரு சகாப்தத்துக்குள் நுழைகின்றோம் என்பதை நினைக்கும்போது மனதுக்குள் ஒருவித தெம்பு பிறக்கின்றது. என்ன செய்யப்போகின்றோம்? எங்கே போகப்போகின்றோம்? இவற்றைக் கோடிட்டுக் காட்டவேண்டியது பத்திரிகையின் ஒரு தார்மீகக் கடமையே! புதிய பல சத்தியங்களை முன்வைப்போம்! முடிந்தளவுக்கு அவற்றுக்காக உழைப்போம்!

பேதங்களை மறப்போம்! உறவுகளைப் பலப்படுத்துவோம்!

விட்டுக் கொடுப ˙போம் ! விந்தைகள் புரிவோம்!

நிமிர்வதற்காகக் குனிவோம்! நனி சிறந்த நற்றமிழை நன்றாகப் பேணுவோம்!

பனிவிழும் இந்நாடுகளில் நம்மைத் தொலைக்காதிருப்போம்!

இலக்கியப் படைப்புக்களில் நம்மைத் தேடுவோம்!

எப்படி இருந்தோம்? எப்படி இருக்கிறோம்? எப்படி இருக்கப்போகிறோம்? இப்படி நம்மை நாமே தேடுவோம்!

புத்தாயிரமாம் ஆண்டின் புதிய வேதமாகத் திருமந்திரத்தை திருவருள்முன் கொண்டுவருவோம்!

இவ்வருடம் கலசம் பல விடயங்களைத் தேடப் போகின்றது.

தேடும்போது வரப்போகும் நெருடல்களையெல்லாம் சகித்துக் கொள்ளவும் கலசம் தயாராகிவிட்டது!

சமயம் கலந்த இலக்கியத்துக்குள் தன்னை நுழைத்துக் கொள்ளவும் இவ் வரலாற்றுப் பெருமைமிக்க நுழைவாயிலில் கங்கணம் கட்டி நிற்கின்றது கலசம்.

புதிய புதிய விடயங்களை உங்களுக்குத் தரப்போகின்றது கலசம்!

ஆன்மீக வேலிகளைத்தாண்டி உங்களைத்தேடி வருவதற்காக கலசம் தான் நடந்துவந்த பாதையின் சிதைவுகளைச் செப்பனிட்டுக் கொண்டிருக்கிறது.

இவையெல்லாம் வாசகப் பெருமக்களாகிய உங்களை நம்பித்தான்!

புத்தாயிரமாம் ஆண்டின் தோரணவாயிலில் நிமிர்ந்த பார்வையுடனும் நிறைந்த புன்னகையுடனும் நிற்கின்ற எம் அன்புவாசகர்களே உங்களுக்கு எனதும் என் குழுவினரதும் அன்பு நிறைந்த புத்தாயிரத்தாண்டு வாழ்த்துக்கள்.

மு. நற்குணதயாளன்
ஆசிரியர்

ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

**கலசம் - 28**

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி 1999

# உள்ளே................

ஆசிரியர் : திரு. மு. நற்குணதயாளன்
துணை ஆசிரியர்: திரு சி. அற்புதானந்தன்
நிர்வாகம்: திரு வ. இ. இராமநாதன்
உதவி நிர்வாகம்: திரு சிவ. அசோகன்
நிர்வாகக்குழு:
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு. ந. சிவராசன்
திரு. S.தர்மலிங்கம்
Dr. N.நவநீதராசா
திரு இ. சிவானந்தராசா
திரு. S, சிறீரங்கன்
திரு. பால ரவீந்திரன்

தொடர்பு முகவரி:
**49 Marlands Road**

கலசத்தில் வரும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாளராவர். கட்டுரைகளை நிராகரிக்கவோ திருத்தவோ ஆசிரியர் குழுவுக்கு உரிமை உண்டு. பெயர், முகவரி இல்லாது வரும் கட்டுரைகளோ மற்றும் கடிதங்களோ கவனத்திற் கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

இலங்கையில் தொடர்பு:
Mr. K. Balasubramanium, 131 Sangamitha Mawatha, Colombo 13, Colombo
ஜேர்மனியில் தொடர்பு:
Mr. K. Parameswaran, Alte-Aakob Str 134, 10969 Berlin, Germany Tel: 030 251 0209
டென்மார்க்கில் தொடர்பு:
Mr R. Rajendran, Bjergmarken 21, St TV 4300 Holbeck Denmark
கனடாவில் தொடர்பு:
Mr. Siva Thirunavukarasu, 25 Thunder Grove, Apt 1512 Scarborough,Ontario Tel: 416 412 3883

மதிப்புக்குரிய துன்னையூர் ராம் லோகேஸ்வரக் குருக்கள் அவர்கள் மனமுவந்து இலங்கையில் கலசத்துக்கான பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளார். கட்டுரைகள் அனுப்புவோர் சந்தாதாரராக விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**428 R.A. De Mel. Mawatha, Colombo 3**
**Tel: 576283**

| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 01 |
| உள்ளடக்கம் | 02 |
| திருமுறை | 03 |
| திருக்களிற்றுப்படியார் | 07 |
| வணங்கப்படவேண்டியவர்கள்.. | 14 |
| போலி செயற்பாடு போகட்டும் | 17 |
| சிறுவர் கலசம் | 21 |
| சைவ முன்னேற்றச் சங்க செய்திகள் | 29 |
| பாடசாலைச் செய்திகள் | 30 |
| சிந்திக்கத் தொடங்கிய... | 31 |
| புத்தாயிரத்தில் மேன்மை.. | 32 |
| ஸ்ரீ ரமண மகரிஷி | 35 |
| சமய வளர்ச்சிக்கு.. | 37 |
| அருள்மிகு முத்துமாரி.. | 39 |
| தியாகதீபம் | 41 |
| கனகதுர்க்கையம்மன்.. | 42 |
| Original Saivaism as Expounded.. | 44 |

## கலசம் வாசகர்களுக்கு கலசம் ஆசிரியர் குழுவினதும் சைவமுன்னேற்ற சங்க ஆட்சிக் குழுவினதும் **புத்தாயிரமாமாண்டு, பொங்கல்** வாழ்த்துக்கள்

# திருமுறை

"நமச்சிவாயா வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் வாழ்க"

மக்கள் வாழ்க்கையை அகம், புறம் என்று பகுத்து அதன் இயல்புகளை மிக நுட்பமாக ஆய்ந்து சங்க காலத்தை ஒட்டிப் புறப் பொருளின் ஒரு பகுதியாகிய அறத்தின் சிறப்பினை எடுத்து உரைக்கும் அறநூல்கள் பல இயற்றப்பட்டன. சங்க நூல்களில் இருந்து அமைப்பு முறையாலும், பாடு பொருளாலும் மாறுபட்டவைகள் அவை. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்களாகிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் நீதி நூல்களாகும். நீதி நூல்கள் என்று குறிப்பிடும் வழக்கம் தேவார திருமுறை காலங்களில்தான் தோன்றியது. அதற்கு முற்பட்ட காலத்தில் "அறம்" என்ற சொல்லையே கையாண்டு வந்தனர் என்றும் திரு.க.த. திருநாவுக்கரசு கூறுகிறார்.

சமண சமயத்தின் செல்வாக்கு தமிழகத்தில் பெருகி இருந்த காலத்தில்தான் "நீதி" என்ற சொல்லாட்சி தமிழில் வழங்கத் தொடங்கியது. "நீதி" என்பது தமிழ்ச் சொல்லன்று; அது வடமொழிச் சொல்; அறம் என்பதே தமிழ்ச் சொல். ஆனால் அறத்திற்கும் வட நூலார் கூறும் நீதிக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. அறத்தின் பொருள் மிக விரிந்தது. ஆழமானது; இயல்புகளையும் அணைத்துச் செல்லும் தன்மையானது.

"அறம்" என்பதை வரையறுத்துக் கூறுவது எவ்வளவு சிக்கலானதோ அதைவிடச் சிக்கலானது "சமயத்தை" வரையறுத்துக் கூறுவது. எனினும் "மெய்யான ஒழுக்கநெறி" என்பது ஐம்பொறி வாயிலாகப் பிறக்கும் வேட்கையினை வென்று வாழ்வதே இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியாகும்.

இவ்வாறு இறைவனோடு தொடர்புடைய ஒழுக்க நெறியைச் "சமயம்" என்றும், "மதம்" என்றும் "கடவுள் நெறி" என்றும் சான்றோர் கூறுவார்கள். "சமயம்" என்பதற்கு "மனிதனுடைய ஆன்மாவைப் பக்குவப்படுத்தும் நெறி என்றும், "மதம்" என்பதற்குக் கடவுளிடம் கொள்ளப்படும் அசைக்க முடியா நம்பிக்கை" என்றும் சான்றோர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

சமயத்தின் வழி அறக்கருத்துக்களை மக்கள் மனதில் ஆழப் பதிய வைக்க முடியும். அவற்றுள் தலையானது "திருமுறைகள்" திருமுறைகள் புறத்தினையும், அகத்தினையும் மக்கள் போற்றிப் பாடுகின்ற செய்யுட் குறிப்பினையும் கொண்டது. தொகையால் பன்னிரண்டாய், இருபது அருளாளர்களின் திருவாக்கால் பாடப்பட்ட திருமுறைகளைத் "திருநெறித் தமிழ்" என்பார்கள் சான்றோர்கள்.

அரனின் அருள் பெற விரும்பும் அடியார்களோ தமிழ்த் தோத்திர என்பார்கள். அத்திருமுறைத் திருப்பதிகங்கள் பகர்ந்திடும் அருள் வார்த்தைகள் அனைத்தும் அம்மை அப்பரின் அருட்டிறத்தை அள்ளித் தருவனவாகும். அன்பினால் ஓதுவார்— கேட்போர் அனைவர் உள்ளத்தினையும் உருக்க வல்லது திருமுறைகளாகும். பழுதில்லாச் செந்தமிழ் மணி வார்த்தைகளால் கோர்த்தவைகள் திருமுறைகள்.

பன்னிரு திருமுறைகளில் சிறந்து விளங்குபவை தேவாரப் பாடல்கள். அவற்றின் சிறப்புக் கருதியே முதல் ஏழு திருமுறைகளாக அவை தொகுக்கப்பெற்றுள்ளன. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரப் பாடல்களுக்கே முதன் முதலில் "திருமுறை என்ற பெயர் வழங்கப் பெற்றது என்றும், பின்னர்தான் ஏனைய சைவ அடியார்கள் எழுதிய நூல்களுக்கும் திருமுறை என்னும் பெயர் வழங்கப் பெற்றது என்றும் கூறுவர்.

தேவாரம் என்பதற்கு இரு வகையான பொருள் கொள்ளப்படுகிறது. தே வாரம் எனப் பிரித்து, தேவனிடத்து அதாவது சிவ பிரானிடத்து அதனை ஒதுவோர்க்கும் கேட்போருக்கும் அன்பை விளைவிப்பது என்று பொருள் கூறுவார். மற்றொரு சாரார் தே+ஆரம் எனப் பிரித்துச் சிவ பிரானுக்கு ஆரம் போல் அழகு செய்வது என்று பொருள் கொள்ளுவார். தேவாரப் பாடல்கள். உலகம், உயிர், இறைவன் என்னும் முப்பொருள்களையும் முறையாகத் தருவன. அறநெறியில் நின்று ஒழுகுவோர்க்கு இறைவன் என்றும் துணை நிற்பான் என்று வலியுறுத்துவன. தேவார ஆசிரியர்கள் அறநெறிச் சட்டத்தைத் தெய்வீக ஆணையாகக் கருதினர். உலக உயிர்களின் உயர்விக்காத தீமைகளைத் தாம் பெற்றுக் கொண்டு நன்மைகளை உலகுக்குத் தரவேண்டி இறைவன் செய்த திருவிளையாடல்களைக் கதையாகக் கூறினார்கள்.

கவிமணி, நெருப்பை நீராக்கியதும்,
எலும்பைப் பெண்ணாக்கியதும்,
யானையைப் பணியச் செய்ததும்
தமிழ்ப் பாடல்களே என்கிறார்கள்.

தமிழ்ப் பாடல்கள் என்று கூறுவதைத் திருமுறைப்

பாடல்கள், தேவாரப் பாடல்கள் என நாம் கொள்ளலாம்.

வெந்தழல் நீராமால் வெள்ளெலும்பு பெண்ணாமால்
வந்த மதவேழம் வணங்கிடுமால் — சந்தமெழப்
பாடுவார் உள்ளுருகிப் பாடுந் தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர்

தமிழிசைக்கு மட்டுமல்லாது, மக்களை நன்னெறியில் வழி நடத்திச் செல்ல சுவைமிக்க பக்திப் பாடல்களுக்கும் அறக் கருத்துக்களை எடுத்துரைக்கும் பாடல்களுக்கும் நிகர் எனலாம்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தர்" எனச் சுந்தரர் போற்றிய திருஞான சம்பந்தர் பாடிய பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. காலத்தால் அவரது பாடல்கள் முந்தியவை என்பதால் முதல் மூன்று திருமுறைகளாக அவைகள் தொகுக்கப்பெற்றன எனக் கூற இயலாது. அவர் காலத்துக்கு முன் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் பாடல்களும், திருமந்திரமும் முறையே பதினோராம் திருமுறையாகவும், பத்தாம் திருமுறையாகவும் அமைக்கப் பெற்றுள்ளன.

சம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் என்ற போதிலும், திருஞான சம்பந்தரின் பாடல்களே முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றுள்ளன.

அவ்வாறு தொகுக்கப் பெற்றதற்குக் காரணம், சம்பந்தர் திருநாவுக்கரசரைவிட முதலில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார் என்பதாலும், தேவாரப் பாடல்களிலேயே சம்பந்தர் பாடிய பாடல்களே மிகுதியாக கிடைத்துள்ளன என்பதாலும், மூன்று வயதில் தொடங்கிய சம்பந்தர், பதினாறு வயதில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார். அவர் பாடிய பாடல்:

"ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் பாடல்கள்" என்று கூறப்படுகிறது. ஆனால், இன்று நமக்கு கிட்டியவை **4168** பாடல்களே.

மூன்று திருமுறைப் பாடல்களிலும் பாடற்பொருள் சிவபெருமானைப் பற்றியதாகவும், தாம் சென்ற இடங்களின் இயற்கை வருணனைகளும், வழிபாட்டின் பயனும் அமைந்ததாக உள்ளன. இவ்வுலக வாழ்க்கையில் அமைந்த துன்பங்களைப் போக்கவும், இன்பங்களை ஆக்கவும், பாவங்களை நீக்கிப் புண்ணியங்களைப் பெறவும் சிவபெருமானை வழிபட வேண்டும் என்கிறார்.

"நமச்சிவாயம்" என்னும் நாமத்தை ஓதினாலே போதும் ஒருவனது இடர் மறைந்துவிடும் என்கிறார்.

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே

என்று இறைவன் மீது மாசற்ற அன்பு செலுத்துதல் வேண்டும். அவனது அருள் உள்ளத்தை எண்ணி எண்ணிப் போற்றுதல் வேண்டும். அவ்வாறு செய்பவருக்கு எந்நாளும் இன்பந்தானேயொழிய துன்பம் இல்லை என்பதையே சம்பந்தர் வலியுறுத்துகிறார்.

பெண்ணின் பெருமையைப் பேசியவர் சம்பந்தர். இறைவன் மங்கை நல்லாளை ஒரு பாகமாகக் கொண்டிருக்கும் கோலத்தைச் சுட்டிக் காட்டி,

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறையிலை
கண்ணில் நல்லதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை
இருந்ததே என்கிறார்.

ஆணும் பெண்ணும் சமம். இருவரும் இணைந்து வாழ்ந்தால் இல்லறம் சிறக்கும். என்று வலியுறுத்திக் கூறப்படுகிறது. உலகின் அச்சாணி குடும்பம். அக்குடும்பம் சிறப்பாக அமைந்தால் சமுதாயம் சிறப்பாக அமையும். சமுதாயம் சிறப்பாக அமைந்தால் நாடு சிறப்புறும். இன்று அறநெறிக் கல்வி குடும்பம், பள்ளி, சமுதாயம் நாடு என்ற பல்வேறு கூறுகள் ஒன்றோடு ஒன்று நுணுக்கமாய்ப் பின்னிப் பிணைந்துள்ளதை சுட்டிக்காட்டுகிறது. தனிமனிதன் ஒழுங்காகச் செயற்பட்டால் சமுதாயம் மேன்மையுறும், இந்த அறநெறிக் கோட்பாட்டுக் கருத்துகளை ஞானசம்பந்தர் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமது பாடல்களில் அழகுறக் கூறியுள்ளார்.

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கையில் பண்பும் பயனும் அது"
என்கிறார் வள்ளுவர்.

அன்பையும் அறத்தையும் போற்றினால் இல்வாழ்க்கை சிறக்கும்.

நினைப்பெனும் நெடுங் கிணற்றை நின்று நிறையாரே
மனத்தினை வலித் தொழிந்தேன் அவலம் வந்தடையாமைக்
கனை தெழு திரள் கங்கை கமழ் சடைக்கரந்தான் தன்
பனைத்திரள் பாயருவிப் பருப்பதம் பரவுதே

மக்கள் அடையும் இன்னல்களுக்கு எல்லாம் அடிப்படைக் காரணம்

ஆசை என்னும் நெடுங்கிணற்றில் ஆழ்வதுதான் என்று கூறுகிறார் புத்தர். ஆசை, பேராசையாகும் போதுதான் தீமைகள் அதிகரித்து, அறம் மறைந்து,

மறம் ஆட்சி புரியத் தொடங்குகிறது.

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல்
நான்கும் இழுக்கா இயன்றது அறம்" என்கிறது வள்ளுவம்.

சம்பந்தர் போல் திருநாவுக்கரசரும் அறநெறிப் பண்புகளை உணர்த்துகிறார். திருநாவுக்கரசர் தேவாரம் மூன்று திருமுறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருமுறை வரிசையில் அவை நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக அமைந்து உள்ளன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரது பாடல்களையும், 'தேவாரம்' என்ற சொல்லாலும், சுந்தரரது திருவாக்கினைத் 'திருப்பாட்டு' என்ற சொல்லாலும், சம்பந்தருடைய திருவாக்கினை 'திருக்கடைக்காப்பு' என்று குறிக்கும் வழக்கம் வந்தது.

"அப்பர்" என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசர் திருவாக்கிற்குத் தேவாரம் என்ற வழக்கு இருந்தது. உள்ளத்தை உருக்கும் இறைவன் திருவடிக்கு அன்பை விளைவிப்பதில் அடிகளார் பாடல்களுக்குத் தனித் திறன் இருந்தது. அனுபவித்து உணரப்பட்ட அடிகளார் பதிகம் மனத்தையும் கனி வித்து உருகச் செய்வது.

"அத்தாவுன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்
அருள் நோக்கில் தீர்த்த நீராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியை நீ எளியை ஆனாய்
எனையாண்டு கொண்டு இரங்கி ஏற்றுக் கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயன் நாயேன்
பிழைகள் எத்தனையும் பொறுத்தாய்
இத்தனையும் எம்பரமோ ஐயா, ஐயோ!
எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே"

மனிதர் குறைபாடுகளுடையவர் என்பதையும், எம்பெருமானிடம் உருக்கமாக எடுத்தோதும் அப்பர், மனிதரது குறைகளை உணர்ந்தே இறைவன் அருள் பாலிக்கிறான் என்ற கருத்தையும் கூறுகிறார். தவறு செய்வது இயல்பு, அதை உணர்ந்து திருந்துபவனே பண்பு மிக்க மனிதன்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் போல் சுந்தரரும் அறநெறிப் பண்புகளை உணர்த்தியுள்ளார். ஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஒரே காலத்தவர். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவ்விருவரும் பாடிய தேவாரப் பாடல்கள் முதல் ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரது பாடல்கள் ஏழாம் திருமுறையாக அமைக்கப்பெற்றுள்ளன.

சுந்தரர் பாடல்களில் நமக்கு இன்று கிடைத்திருப்பவை 1026. அவருடைய பாடல்களில் துறவும் உலக வெறுப்பும் காண்பதற்கு அரியவை.

சிவனடியார்களின் திருத்தொண்டுகளையும், பக்தித் திறங்களையும் உலகம் அறியச் செய்த பெருமை சுந்தரருக்கே உரியதாகும். முதலில் திருத்தொண்டர்த் தொகையைப் பாடித் தில்லை வாழ் அந்தணர் முதலான நாயன்மார்களை அறிமுகம் செய்து வைத்தவர் இவரே. பின்னர், நம்பியாண்டவர் நம்பி திருத்தொண்டர் புராணம் பாடவும் மூல முதற்பொருளாய் அமைந்தது இதுவே.

இறைவனிடம் தோழமை நெறியில் வேடிக்கையாக விளையாடிப் பாடிப் பரவுகிறார். திருக்கடைக் காப்பில் தம்மையும் தமது தமிழையும் அத்தமிழை ஓதுவார் பெறும் பயனையும் உரைக்கும் பகுதிகளும் சுந்தரரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களைத் தருகின்றன.

உலோபியை வள்ளல் என்றும் கல்லாதவனைக் கல்வியில் வல்லவன் என்றும், பொய்யான வாழ்வுடைச் செல்வனைப் புகழ்ந்து பாடாதீர்கள் என்று புலவர்களுக்கு அறிவுரை கூறுகின்றார் சுந்தரர். இடர் நீங்கி இன்பமாய் வாழ வேண்டுமானால் சிவபெருமானைப் பாடுங்கள் என்கிறார்.

இன்று இளைஞர்கள் பலர் நவீன மோகங்கொண்டு மேலை நாட்டுத் தாக்கத்தால் தகாத வழிகளில் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிறார்கள். அறிவியல், பொருளியற் துறைகளில் மேலை நாட்டவர் அடைந்துள்ள வளர்ச்சியைப் பின்பற்றுவதில் தவறில்லை. ஆனால் பண்பாட்டுத் துறையில் அறநெறியில் தமிழன் கண்டுள்ள ஒப்பற்ற நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அறநெறிக் கோட்பாடுகளை வழுவாது கடைப்பிடிக்கத் திருக்குறள் போன்ற அறநூலையும், திருமுறை போன்ற சமய நூல்களையும் நம் இளையவர்கள் படித்து வாழ்வாங்கு வாழ வேண்டுகிறேன்.

நமச்சிவாய



# GNANAM
## T E L E C O M




தொலைபேசி இணைப்புக்கள்
மலிவு விலையில் வேண்டுமா?

**நிறைவான சேவை!**

**விரைவான சேவை!**

**தெளிவான சேவை!**

| | |
|---|---|
| Australia | 5p |
| Canada | 5p |
| France | 5p |
| Germany | 5p |
| India | 25p |
| Italy | 7p |
| Malaysia | 14p |
| Pakistan | 29p |
| Singapore | 15p |
| Sri lanka | 27p |
| U.K | 3p |
| U.K mobile | 11p |

இவற்றுக்காக எங்கும் நீங்கள்
போகவேண்டாம்.
உடனே அணுகுங்கள் ஞானம்
தொலைபேசி நிறுவனத்தை.

**இத்தனைக்கும் நீங்கள்
அணுகவேண்டிய முகவரி**

*Gnanam*
**telecom centers**

180 High Street North
East ham London
Tel: (+0044) 0181 47 08 84 4
Fax: (+0044) 0181 47 08 77 7

**ஞானம் நிறைந்தவர்களே ஞானத்தை நாடுங்கள்**

# திருக்களிற்றுப்படியார் — ஓர் ஆய்வு

டாக்டர் கோமதி சூரியமூர்த்தி
இணைப்பேராசிரியை, சைவசித்தாந்தத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

சென்ற இதழின் தொடர்ச்சி...........

## அட்டமூர்த்தன்

எங்கும் வியாபித்துள்ள இறைவனை எட்டுப் பொருட்களில் அடக்கிக் கூறுவதுண்டு. அவை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா, இதனை,

"ஐம்பூதம் முதல் எட்டுருவாய் நின்றானும்" (செ.36)
"மாறாத என் வகையாய்" (செ.36)

என்பதாய் ஆசிரியர் அறிவுறுத்துகின்றார்.

## சிவசக்தித் தொடர்பு

பொன்நிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல்
அந்நிறம் அண்ணலும் அம்பிகையும் (செ.79)

என்ற பாடல் தொடர்களில் ஆசிரியர் சிவனைக் கட்டிப் பொன்னிற்கும், அம்பிகையை அப்பொன்னிலிருந்து செய்யப்படும் அணி கலனுக்கும் ஒப்பிடுகின்றார். கட்டிப் பொன்— முழுமை, அதனின் விரிவே அணிகலன்கள் கதிரவன்—முழுமை. அவனின் விரிவே கதிர். அதுபோலச் சிவன் முழுமை அவனின் விரிவே சக்தி எனப்படும். மேலும் ஆசிரியர்

"செந்நிறத்தன்
எந்நிறத்தளாய் இருப்பாள் எங்கள் சிவபதியும்
அந்நிறத்தனாய் இருப்பன் ஆங்கு" (செ.79)

என்று திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் கூறுவதுடன்,

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் நிற்பதன்
அவளும் தானே"
(சிவஞானசித்தியார் சுபக்கம், 165)

என்ற அருணந்திசிவாசாரியார் வாக்கு ஒப்பு நோக்குதற்குரியது. ஏகனாய் நிற்கும் இறைவனே சிவம், சக்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், மால், அயன் என்னும் ஒன்பது பேத வடிவங்களையும் பொருந்தி நின்று பஞ்சகிருத்தியங்களைச் செய்வன். சிவபேதம் ஒன்பதுக்குரிய சக்தி பேதமும் ஒன்பது வகைப்படும். ஒன்றாகிய பராசக்தியே சிவபேதம் ஒன்பதுக்கேற்ப சிவம், சக்தி, நாதம், விந்து, மனோன்மணி, மகேசை, உமை, இலக்குமி, சரஸ்வதி என ஒன்பது சக்தியாய் நிற்பாள்.

## பிரிப்பற்றது

இறைவனுக்கும் சக்திக்குமுள்ள தொடர்பு பிரிப்பற்றது என்பதைப் பின்வரும் தொடர்கள் உணர்த்தும்.

"மாதொரு கூறு" (செ.42)
"சேயிழைபால் என்றும் பிரியாது நின்றவன்" (செ.67)
"துரியம் கடந்து சுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாது நிற்கின்ற பெம்மான்" (செ.69)
"தாரத்தோடு ஒன்றாவர் தாரத்து ஓர் கூறாவர்
தாரத்தோடு எங்கும் தலைநிற்பார்" (செ.80)

## இறை உயிர்த் தொடர்பு

இறைவன் உலகுயிர்களோடு கலப்பினால் ஒன்றாய், பொருள் தன்மையால் வேறாய், உள்ளிருந்து இயக்கும் தன்மையால் உடனாய் விளங்குகின்றான் என்பது சைவசித்தாந்தக் கோட்பாடு. இதனை,

"ஈறாகி அங்கே முதல் ஒன்றாய் ஈங்கிரண்டாய்
மாறாத எண்வகையாய் மற்றிவற்றின் — வேறாய்
உடனாய் இருக்கும் உருவுடைமை என்றும்
கடனாய் இருக்கின்றான் காண் (செ.86)

என்ற திருக்களிற்றுப்படியார் பாடல் உணர்த்து கின்றது. முதலிரண்டடிகள் ஒன்றாதலை உணர்த்தும். இதற்கு முன்னோடியாக,

"ஈறாய் முதல் ஒன்றாய் இருபெண்
ஆண் குணம் மூன்றாய்
மாறா மறை நான்காய் வருபூதம் அவை ஐந்தாய்
ஆறார் சுவை ஏழோசையோடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடனானான் இடம் வீழிம்மிழலையே"
(1:11:2)

என்று சம்பந்தர் கூறுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

## இறைவன் தொழிலாற்றும் முறை

உயிர்கள் தம் கைகளால் தொழிலாற்ற இறைவன் தன் சக்தியினால் தொழிலாற்றுகின்றான் என்பதைத் திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் நயத்துடன்,

"நங்கையினால் நாம் அனைத்தும்
செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினால் செய்தளிக்கும் நாயகன்" (செ.78)

என்று கூறுகின்றார். முதலடியிலுள்ள நங்கை என்றது நம்+கை எனப் பிரிக்கப்பட்டு பொருள் தரும். இரண்டாம் அடியிலுள்ள நங்கை என்றது பெண் — சக்தியைக் குறிக்கும். இறைவன் உயிர்களைப் போல் கரணங்களால் செயலாற்றவில்லை என்பதை இஃது உணர்த்தும். மேலும் கரணங்களால் செய்யாமல் சங்கற்ப மாத்திரத்தில் (நினைப்பளவில்)

தொழிலாற்றுவதைச் "செய்யாச்செயல்" (செ. 59) என்ற சொல் உணர்த்தும்.

## இறை இயல்புகள்

பின்வரும் திருக்களிற்றுப்படியார் பாடல் இறைவனுடைய பல பண்புகளை உணர்த்தும்.

"ஒன்றன்று இரண்டன்று உளதன்று இலதன்று
நன்றன்று தீதன்று நானன்று — நின்ற
நிலையன்று நீயன்று நின்னறிவும் அன்று
தலையன்று அடியன்று தான்" (செ.58)

இப்பாடலில் முதலிரண்டு சொற்கள் இறைவனுக்கும் உயிர்கட்குமுள்ள தொடர்பை உணர்த்தும். இறைவனுக்கும் உயிர்கட்குமுள்ள தொடர்பை ஒன்று என்று கூறவும் முடியாது. இரண்டு என்று சொல்லவும் முடியாது. இறைவன் பாசஞானத்தினாலும் (நூலறிவு), பசு ஞானத்தினாலும் (உயிர்களின் சிற்றறிவு) அறியப் படாதவன். ஆதலால் அவன் உன்பொருள் அன்று. அவன் பதி ஞானத்தால் அறியப்படுபவன் ஆதலால் அவனை இல் பொருள் என்றும் கூற முடியாது. அவன் உயிர்கட்கு அவை செய்த நல்வினை, தீவினைகட்கேற்ற பலன்களை ஊட்டுபவன். ஆதலால் நன்றன்று, தீதன்று என்கின்றார். அவன் நான் என்று சொல்லப்படுகின்ற பாசமும் அன்று, அவன் உயிரன்று, உயிரறிவு மன்று. அவனுக்கு முதலும் இல்லை. முடிவும் இல்லை.

## பசு இயல்புகள்

உயிர் அநாதி

"அநாதி எனப்பெற்ற அணு" (செ.43)

அணு என்றது ஆணவத்தால் அணுத்தன்மை செய்யப்பட்ட உயிரைக் குறிக்கும். முற்கூறிய தொடர் உயிர்அநாதி என்பதை உணர்த்தும்.

உயிர்அடிமை

"நாயகற்கும் நாயகிக்கும் நானடிமை எப்பொழுதும்" (செ.98)

என்றது உயிர் கட்டுநிலையிலும், முக்திநிலையிலும் இறைவனுக்கு அடிமை என்பதை உனர்த்தும்.

உயிரறிவு

"சிவனுடையது என் அறிவு" (செ. 64)

"அவனே அறிவாய் நின்றாலும்" (செ.85)

போன்ற திருக்களிற்றுப்பாடியார் பாடல் தொடர்கள் இறைவன் அறிவிக்க அறிவன உயிர்கள் என்பதை உணர்த்தும்.

உயிர்க்குரிய சார்பு

"சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் — சார்பு
கெட ஒழுகின் நல்ல சமாதியும் கேதப்
பட வருவதில்லை வினைப்பற்று (செ.34)

இப்பாடலில் இரு இடங்களில் வரும் சார்புணர்தல் என்பதில் சார்பு என்றது இறைச்சார்பை குறிக்கும். சார்பு கெட என வரும் இடங்களில் சார்பு என்றது உலகச் சார்பைக் குறிக்கம். "சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகுதலாவது" உயிர்கட்கு மேலாய சார்பு இறைச் சார்பு என்பதை உணர்த்தும் துன்பம் தரும் உலகச் சார்பிலிருந்து நீங்கி வாழ்தல் வேண்டும்.

"சைவனாரவர் சார்பலால் யாதுஞ் சார்பிலோம் நாங்களே" (2:21:9)

என்று திருஞானசம்பந்தர் கூறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. திருவருட்சார்பை உணர்ந்த நிலையில் உலகச் சார்பு நீங்கும். திருவருட்சார்பை உணர்தல் தியானம். அதில் உறைப்புடன் நிற்க உயிர் மேலும் பக்குவமுற்று நான் தியானிக்கிறேன் என்ற தன்முனைப்பும் நீங்கும் நிலை சமாதி. அது உயிர் இறைவனோடு கூடி மகிழும் நிலை.

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தார சார்தரு நோய் (குறள், 359)

என்ற வள்ளுவர் வாக்கு முற்கூறிய திருக்களிற்றுப் படியார் பாடலுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

## பாசம்

"அநாதியான ஆர்த்த துயர் (செ.43)

என்றது துயரத்திற்குக் காரணமான பாசத்தைக் குறித்தது.

"நிகளமாம் ஆணவ மூலமலம்" (செ.4)

இத்தொடரில் ஆசிரியர் ஆணவத்தை மூலமலம் என்றும், 'நிகளம்' என்றும் குறிப்பிடுகின்றார். செம்பிற்களிம்பு போல உயிரை அனாதியே ஆணவம் பிணித்துள்ளது. அதுவே உயிர்கள் அடையும் எல்லாத் துன்பத்திற்கும் காரணம் ஆகும். அஃது இறைவனை உயிர்கள் உணராவண்ணம் தடுக்கும் முதல் தடை ஆகும். எனவே மூலமலம் என்றார். நிகளம் என்றால் விலங்கு, விலங்கு ஒரு மனிதனைச் சுதந்திரமாகச் செயற்படவொட்டாது தடுக்கும். அதுபோல ஆணவம் உயிர்களின் அறிவு, இச்சை, செயல்களைச் செயற்படவொட்டாது தடுப்பதால் அதனை நிகளம் என்றார்.

'வாஞ்சைக் கொடி வளர்க்கும் ஆணவம்" (செ.59)

உயிர்கள் மாயையின் காரியமான தனு, கரண, புவன, போகத்தில் ஆசை கொண்டுள்ளது. இந்த ஆசைக்குக் காரணம் ஆணவம். எனவே ஆசிரியர் "வாஞ்சைக் கொடி வளர்க்கும் ஆணவம்" என்றார். மேலும் மற்றோரிடத்தில் ஆணவத்தை "மோகக் கொடி" (செ.98) என்கின்றார்.

"மோக மிக உயிர்கள் தோறும் உடனாய் நிற்கும் மூல ஆணவம் ஒன்று" (சிவப்பிரகாசம், 32) என்று உமாபதிசிவமும்,

"இருள்மலத்துள் மோகமுறும் பல்லுயிர்" (கந்தர்கலிவெண்பா, கண்ணி 22)

என்று குமரகுருபரர் கூறுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கன.

"முக்தி முதுற்கொடிக்கே மோகக்கொடி படர்ந்து
அத்தி பழுத்தது அருளென்னும் கத்தியினால்
மோகக் கொடியறுக்க முக்திப்பழம் பழுக்கும்
ஏகக் கொடி எழும் காண் இன்று (செ.93)

ஒரு குடியானவன் பயிரிட்ட திராட்சைக் கொடியைச் சுற்றி நச்சுக்கொடி படர்ந்திருந்ததால், நல்ல திராட்சைக் கனிகளைப் பெறவேண்டுமானால் அவன் நச்சுக்கொடியைக் கத்தி கொண்டு அறுப்பான். அதுபோல முக்திப்பழம் பெறுதற்குரிய கொடியான ஆன்மா மீது ஆணவமாகிய மோகக்கொடி படர்ந்ததால் உலகப் பற்றாகிய அத்திப்பழமே பழுத்தது. அருளென்னும் கத்தியினால் ஆணவமாகிய மோகக் கொடியை அறுக்க முக்திப்பழம் கிட்டும் என ஆசிரியர் அறிவுறுத்துகின்றார்.

### கன்மம்

"இன்று இங்கு அசேதனமாம் இவ்வினைகள் ஓரிரண்டும்" (செ.42)

என்ற பாடலடி வினைகள் நல்வினை, தீவினை என்று இரண்டு வகைப்படும் என்பதையும், அவை சடம் என்பதையும் உணர்த்தும். பிறவிக்கும் காரணம் வினை என்பதை "பவகன்மம்" (செ.16) என்பதால் உணர்த்துகின்றார்.

### மாயை

மாயை அருவமானது. இறைவனுக்கு வைப்பு சக்தியாய் விளங்குவது. உயிர்கள் வினைப் பலன்களைத் துய்க்க தனு, கரண. புவன, போகங்களை இறைவன் தோற்றுவிக்க முதற்காரணமாய் விளங்குவதாதலால் "அருமாயை" (செ.89) என்று ஆசிரியர் உணர்த்துகின்றார். நிலையில்லாதவற்றை நிலையானதாகக் கருதுவன உயிர்கள் ஆதலால் "பெருமாயைச் சூழல்" (செ.89) என்றார்.

"தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்
மூல உடம்பாம் முதல் நான்கும் — மேலைச்
சிவமாம்" (செ.37)

என்று முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். பிரகிருதி மாயையிலிருந்து தோன்றும் இருபத்து நான்கு தத்துவங்கள் ஆன்ம தத்துவம் எனப்படும். அசுத்த மாயையிலிருந்து தோன்றுவன வித்தியா தத்துவம் ஏழு ஆகும். இந்த முப்பத்தொரு தத்துவங்களும் உயிரின் தூல உடம்பில் பொருந்தி நிற்பன ஆதலால் "தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவம்" என்றார். இவற்றைச் செலுத்துவன சிவதத்துவங்கள். அவற்றுள் விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்ற நான்கையும் "மூல உடம்பு" என்றார். இவற்றிற்குக் காரணமாய் ஆன்மாவுக்குப் பிராணனாய் நிற்கும் சிவதத்துவத்தை 'மேலைச் சிவமாம்' என்றார்.

### சாதனம்

சைவசித்தாந்தம் இறைவனை அடைதற்குரிய சாதன நெறிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கினைக் கூறும். திருக்களிற்றுப்படியார் அதனைச் சிவதன்மம், சிவயோகம், சிவஞானம் என மூன்றாகக் கூறும் (செ.15), சரியை, கிரியை என்ற இரண்டையும் சிவதன்மம் என்ற ஒன்றில் சிவதன்மம் என்ற ஒன்றில் அடக்கிக் கூறும் சிவதன்மம் என்ற சொல் திருஞான சம்பந்தர் தேவாரத்தில் பயிலப்பட்டுள்ளது.

'திறங்கொண்ட அடியார்மேல் தீவினை நோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம் உரைத்த பிரான்"
(2:43:6) என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

பலனைக் கருதாமல் செய்வது தன்மம். பலன் கருதிச் செய்வது கன்மம். இச்சாதன நெறிகளால் உயிர்களிடத்திலுள்ள நான் என்ற தன்முனைப்பு அழிதலை,

"நல்ல சிவதன்மத்தால் நல்ல சிவயோகத்தால்
நல்ல சிவஞானத்தால் நானழிய" (செ.15)

என்று திருக்களிற்றுப்படியாரின் ஆசிரியர் கூறுகின்றார்.

"நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழித்து
சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ"
(திருத்தெள்ளேணம், 4)

"ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" (திருத்தெள்ளேணம், 18) என்ற மாணிக்கவாசகரின் பாடலடிகள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

### சிவ தன்மத்தின் வகைகள்

சிவதன்மத்தை வல்வினை, மெல்வினை என இரண்டாக இந்நூலாசிரியர் பாகுபாடு செய்கின்றார். வல்வினை என்பது செய்தற்கரிய சிவவழிபாடு. மெல்வினை என்பது செய்தற்கு எளிய வழிபாடு. வல்வினைக்கு எடுத்துக் காட்டாக சிறுத்தொண்டர், சண்டீசர், அரிவாட்டாயர் (செ.18, 19,20) முதலியோர்களை ஆசிரியர் கூறுகின்றார். சிறுத்தொண்டரின் செயலை,

"இரங்காதே கொல்வினையே செய்யும் கொடுவினை" (செ.18) என்று ஆசிரியர் கூறுகின்றார். அதனையும் பிறரைக் கொண்டு செய்வித்தாரில்லை. தாமே செய்தனர். "இருவர் மனமும் பேருவகை எய்தி அரியவினை செய்தார்" என்று சேக்கிழார் கூறுகின்றார் (சிறுத் பு. 64) அவரை "உலகை வென்ற தாதையார்" (சிறுத் பு 62) எனப் போற்றுகின்றார்.

"பாதகம் என்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும் — சேதிப்பக்
கண்டு ஈசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
சண்டீசர் தன் செயலால் தான்" (செ.19)

சிவலிங்கத்திற்கு திருமுழுக்காட்ட வைத்த பாற்குடத்தைக் காலால் தந்தை இடற, சண்டீசர் அருகிலுள்ள கோலை ஓச்ச அது மழுவாகி அவர் கால் துண்டானது. அச்செயல் பாதகம். தந்தை வேதியனாதலால் அவருக்குத் தீங்கிழைத்தது.

பிரம்மகத்தி தோசம் என்னும் பழியை உண்டாக்கும். ஆனால் அவருக்குக் கிடைத்தது என்ன? பரிசு. என்ன பரிசு?

"அண்டர் பிரானுந் தொண்டர் தமக்கு அதிபனாக்கி அனைத்தும்நாம்
உண்டகலமும் உடுப்பனவும் குடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதம் தந்தோம்" (சண்டேசுர நாயனார் புராணம் செ, 56)

"அடுத்த தாதை இனி உனக்கு நாம்" (சண்டேசுர பு.54) என்று இறைவனே கூறியது அப்பரிசினை உணர்த்தும். பெரிய புராண நாயன்மார்களுள் இருவர் இறைவனுக்குப் பிள்ளையாகப் போற்றப்படுவர். 1. திருஞான சம்பந்தர் — ஆளுடைய பிள்ளையார் எனப்படுவார். 2. சண்டீசர் சேய்ஞ்ஞலூர்ப் பிள்ளையார் எனப்படுவார்.

சண்டீசரின் இச்செயல்

"அரனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்" (சிவஞான சித்தியார் சுபக்கம், 119)

"பரிவார் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே"

(சிவஞானசித்தியார் சுபக்கம், 304)

என்று கோட்பாடாக அமைகின்றது.

"தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றியவா தோணோக்கம்"
(திருத்தோணோக்கம், செ.7) என்ற திருவாசகப் பாடல் இங்க ஒப்புநோக்கத்தக்கது.

அரிவாட்டாயநாயனார் செந்நெல் அரிசி, மாவடு, கீரை முதலிய பொருட்களை இறைவனுக்கு நைவேத்தியம் பண்ணச் சுமந்து சென்றபோது வரப்பு தடுக்கி கீழே விழுந்ததால் நைவேத்தியப் பொருட்கள் கீழே சிந்திவிட்டன. அதனால் மனம் வருந்தி நாயனார் தம் ஊட்டியை அறுக்கப் போக, இறைவன் ஓசை கேட்ப அப்பொருட்களை உண்டருளினார். முற்கூறிய நாயன்மார்கள் அத்தகைய அரிய செயல்களைச் செய்தற்கு இறைவன் மீது அவர்கள் கொண்டுள்ள வரம்பு கடந்த பக்தியே காரணமாகும். அவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றினையும் இறைவனுடைய உடைமையாகக் கருதியமையால் அவற்றை அவனுக்கே உடைமையாக்கினர். ஒருவனிடம் 100 ரூ வேண்டுமா அல்லது 500 ரூ வேண்டுமா என்று கேட்டால் அவன் என்ன கூறுவான்? 500 ரூ வேண்டும் என்பான். ஏன்? அதன் மதிப்பு அதிகம். அதுபோல உலகப் பற்றைவிட சிவப்பற்று பெரிது. சொல்லணா இன்பம் தரும் சிவப்பற்றுக்காக தற்காலிக உலகப் பற்றை அவர்கள் துறந்தனர். சிறுத்தொண்ட நாயனார் புராணத்தில் பிள்ளைப் பற்று அறுதலையும், சண்டேசு வரநாயனார் புராணத்தில் தந்தைப் பற்று அறுதலையும், அரிவாட்டாய நாயனார் புராணத்தில் தன்னுயிர்ப்பற்று அறுதலையும் காண்கின்றோம்.

திருக்கறிற்றுப்படியார் ஆசிரியர் மெல்வினையை நல்வினையாம் என்று அடைமொழி கொடுத்துக் கூறுகின்றார். (செ.17)

## சிவயோகம்

திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் சிவயோகத்தை ஆதாரயோகம் (செ.23) நிராதாரயோகம் (செ.26) என்று இரண்டாகப் பாகுபடுத்திக் கூறுகின்றார்.

## ஆதாரயோகம்

திருவுருவ பழிபாடாகும். அதாவது உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களிலே பெருமானின் பல்வகைத் திருமேனிகளை நினைந்து பேரன்பால் வழிபட்டு ஒற்றுமையுறுதல். பின்வரும் அட்டவணை ஆறாதாரம் எவை என்பதையும், அதற்குரிய இடங்களையும், அவற்றிற்குரிய வழிபடு தெய்வங்களையும் உணர்த்தும்.

## நிராதாரயோகம்

அகண்டமான பெருமானை அருள் வெளியிலே நினைந்து அவனோடு ஒன்றுதலாகும்.

## மத்திரயோகம்

ஓங்காரமாகிய ஐந்தெழுத்தே உமையொரு பாகனாகிய பெருமானைக் காட்ட வல்லதாதலின் அவ்வைந்தெழுத்து ஆறு ஆதாரங்கட்கு அடிப்படையாய் நிற்கின்ற முறையையறிந்து அம்மந்திரத்தின் நுண்பொருளை அறியப்புகுத்து, தன்னுணர்வு கெட்டால் உமை மணவாளன் மலமகல வந்தருளுவான் என்று திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் கூறுகின்றார். (செ.25)

## சிவஞானம்

ஞானத்தை வாளாகவும் ஆன்மாவை வாள் வைப்பதற்குரிய கூடாகவும் ஆசிரியர் கூறுகின்றார். (செ.63) வெறும் கூட்டினால் பயன் இல்லை. வாள் இருக்கும்போதே சிறப்பு. அதுபோல ஆன்மா தனித்துநில்லாமல் ஞானமாகிய வானைத் தன்னத்தே கொண்டு விளங்கும் போதே சிறப்புப்பெறும். "ஞானவாள் ஏந்தும் ஐயர்" (திருப்படை எழுச்சி 1) என்ற திருவாசகப் பாடல் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. ஞானம் என்பது இறைவனை உணரும் அறிவைக் குறிக்கும். திருக்களிற்றுப் படியாரின் ஆசிரியர் அவ்வறிவை மூன்று விதநிலைகளில் உணர்த்துகின்றார்.

1. சிவனே தலைவன். உயிர் தாம் தலைமை இல்லை என்பதை அறிதல்.
2. உயிரறிவு சிவனது அறிவு என அறிதல்
3. உயிர்களின் செயல்கள் இறைவனின் செயல்கள் என அறிதல்.

## சிவஞானம்பெற குருவின் இன்றியாமை

கடல்நீரானது ஒருவனது தாக வேட்கையைத் தணிக்கப் பயன்படாது. ஆனால் அதே நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகி மேகத்தை அடைந்து மழையாகப் பொழியின் அந்நீர் தாக வேட்கையைத் தணிவிக்கும். அதுபோல் ஞான வேட்கையுடைய ஒருவன் தானாகவே சாத்திர நூல்களைக் கற்கப்புகின் தெளிவு பெறான். ஆனால் ஒரு தகுந்த ஞானாசிரியன் மூலம் அவன் சாத்திர நூல்களைக் கற்பின் தெளிவு உண்டாகும். என்று குருவின் இன்றியமையாமையைத் திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் கூறுகின்றார். (செ.6).

## ஞானபூசை

தம்மிற் சிவலிங்கம் கண்டு, அன்பு நீரால் திருமஞ்சனமாட்டித் தன்னையே வாடாத ஒரு மலராகச் சாத்தி வழிபடுதலே ஞான பூசையாகும் என்று ஆசிரியர் கூறுகின்றார் (செ.44)

ஞானமார்க்கம், பக்தி மார்க்கம் என்ற இரண்டும் இறைவனிடம் இட்டுச் செல்லும். தான் என்ற தன்முனைப்பு அறுதலே முக்கியம் என்று ஆசிரியர் கூறுகின்றார்.

## அன்புநெறி

"அன்பே, என் அன்பே என்று அன்பால் அழுதரற்றி
அன்பே அன்பாக அறிவழியும்" (செ.55)

"ஆரேனும் அன்பு செயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணா அரன்" (செ.15)

என்று திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் அன்புநெறி பற்றிக் கூறுகின்றார்.

"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி
என் பொன் மணியினை எய்த ஒண்ணாதே"

(திருமந்திரம் 272) என்ற திருமந்திரப் பாடல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

அன்பு வழிக்கு எடுத்துக்காட்டாக திருக்களிற்றுப்படியாரின் ஆசிரியர் கண்ணப்பர் (செ.52), சேந்தனார் (செ.53), மங்கையர்க்கரசியார் (செ.54) முதலியோர்களைக் கூறுகின்றார்.

கண்ணப்பரின் அன்பை, அன்பு செலுத்திய கண்ணப்பரும், அவரால் அன்பு செலுத்தப்பட்ட காளத்தியப்பருமே அறிவர். பிறர் அதைப் புரிந்து கொள்ளமுடியாது (செ.52) என்று திருக்களிற்றுப்படியாரின் ஆசிரியர் கூறுகின்றார். அப்பாடலில் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை" (திருக்கோத்தும்பி, செ4) என்று திருவாசகப்பாடல் தொடரை எடுத்தாண்டுள்ளார்.

சேந்தனார் தில்லையில் விறகு விற்று அதில் கிடைக்கும் வருவாயில் அடியார்க்கு அமுது படைக்கும் திருத்தொண்டு செய்து வந்தார். ஒரு சமயம் மாவினால் களி சமைக்க இறைவனே அடியாராக வந்து அக்களியினை உண்டு அடுத்த வேளைக்கும் வேண்டும் எனக் கந்தையில் எடுத்துச் சென்றதாக வரலாறு. சேந்தனாரின் அன்பை இவ் ஆசிரியர் போற்றுகின்றார்.

சீர்காழியிலே திருஞானசம்பந்தப் பெருமான் உமையம்மையார் கொடுத்த சிவஞானம் குழைத்த பாலை உண்டார் என்பதை கேட்ட அளவிலே பாண்டிய நாட்டிலுள்ள மங்கையர்க்கரசியாருக்குக் கொங்கை சுரந்தது என்று அவரது அன்பின் மேன்மையை ஆசிரியர் போற்றகின்றார் (செ.54).

சிவப்பிரகாசர் தாம் இயற்றிய நால்வர் நான்மணிமாலை என்ற நூலில் திருஞான சம்பந்தரை நோக்கி "சம்பந்தா நீ பிரம்ம தீர்த்தக் கரையிலே அழுதபோது என் அழுகையொலி கேட்டு சிவஞானம் குழைத்த திருமுலைப்பாலை உனக்கு ஊட்டிய உமாதேவியார் அன்பிற் சிறந்தவளா? அல்லது நீ சீர்காழியில் ஞானப்பால் உண்டாய் என்று கேட்ட அளவில் பாண்டிய நாட்டிலுள்ள மங்கையர்க்கரசியாருக்குக் கொங்கை சுரந்ததே அவர் அன்பில் சிறந்தவளா சொல்" (நால்வர் நான்மணிமாலை 1) என்று கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

## சிவஞானமும் சிவபோகமும்

சிவஞானமும் அதன் பயனான சிவபோகமும் வித்தும், முளையும் போன்றன. வித்தினிடத்து முளையைக் காணாமையால் வித்தைக் கைவிடுவார் போல் ஞானத்தின் பயனுணராதவர் ஞானத்தைப் பெற முயலார். வித்திலிருந்து முளை வந்தபின் அதனைப் பேணாவிடில் பயிராகிய பலனை அடையார். அதுபோல் ஞானத்தைப் பெற்றவர்கள் அந்நெறியில் ஒழுகாவிடில் சிவபோகத்தை இழப்பர் என்று ஆசிரியர் அறிவுறுத்துகின்றார்.

"வித்தும் அதன் அங்கரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்
வித்தும் அதன் அங்குரமும் மெய்யுணரில் — வித்ததனிற்
காணமாமையால் அதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணாமையால் அற்றார் பேறு" (செ.57)

என்று திருக்களிற்றுப்படியார் பாடலுடன்

"வித்தினிலின்றி முளையில்லை அம்முளை
வித்தினிலன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் ஒன்றல்ல வேறல்ல
அத்தன்மைத் தாகும் அரனெறி தானே"

(திருமந்திரம் 1932) என்ற திருமந்திரப் பாடல் ஒப்பு நோக்கத்தக்கது.

## சிவபோகம்

அருள் மூலமே உயிர் அப்பனை அடைந்து சிவப் பேரின்பம் துய்க்கும் என்பதை ஆசிரியர்,

"பேசாமை பெற்றதனில் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பிரான்" (செ.28)

என்று கூறுகின்றார். முதற்கண் உள்ள பேசாமை என்றது திருவருளைக் குறிக்கும். இரண்டாவதாக வரும் பேசாமை என்றது சொல் கடந்த சிவனைக் குறிக்கும். மூன்றாவதாக வரும் பேசாமை என்றது சொல்லொனாத சொல் இயலாதது என்பதை,

"எவ்வாறு இருந்ததென்று எவ்வண்ணம் சொல்லுகேள்
அவ்வாறு இருந்தது அது" (செ.9)

என்ற திருக்களிற்றுப்படியார் பாடல் தொடர் அதனை உணர்த்தும்.

"மருவி இருவரும் புணர வந்த இன்பம்
வாயினாற் பேசரிது மணந்தவர் தாம் உணர்வர்"
(சிவஞானசித்தியார் சுபக்கம், 288) என்ற அருணந்தி சிவாசாரியார் வாக்கும்.

"மகட்குத் தாய் தன் மணாள னோடு ஆடிய
சுகத்தைச் சொல் என்றால் சொல்லுமாறு எங்ஙனே"
(திருமந்திரம், 2944) என்ற திருமூலர் வாக்கும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

## முக்தியில் உயிர்களின் நிலைமை

முக்தியில் உயிர் சிவமாந்தன்மை பெறும் என்று சைவ இலங்கியங்கள் கூறுகின்றனவே. அப்படியானால் முக்தி அடைந்த உயிர் சிவனைப் போல ஐந்தொழில் செய்யுமா என்று சிலர் வினா எழுப்புவர். அதற்கான விடையைத் திருக்களிற்றுப்படியார் அழகிய உவமை மூலம் எடுத்துரைக்கின்றது. "மரத்தைச் சார்ந்து வாழும் புல்லுருவி மரம் தரும் கனிவகைகளைத் தரவல்லன அல்லன. அதுபோல் முக்தியில் சிவத்தைச் சார்ந்து சிவானுபவம் துய்க்கும் உயிர்கள் சிவனைப் போன்று ஐந்தொழில் செய்யும் ஆற்றல் உடையன அல்ல. சிவானுபவம் மட்டுமே துய்க்கும் என்று ஆசிரியர் கூறுகின்றார். (செ.92)

"உம்பர்பிரான் உற்பத்தி ஆதிகளுக்கு உரியன்
உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே"
(சிவஞானசித்தியார் சுபக்கம் 319)

என்ற அருணந்தி சிவாசாரியார் வாக்கு இங்கு ஒப்பு நோக்குதற்குரியது.

## உயிர்கள் வேண்டத்தக்கது

இறைவனிடத்து உயிர்கள் வேண்டத்தக்கது பிறவாமை ஒன்றே ஆகும். அப்பிறவாமையும் வேண்டாமை எனப்படும் அவா அறுத்தலால் விளைவதால் இறைவனிடம் வேண்டும்போது அவா அறுத்தலையே வேண்டுக என்று ஆசிரியர் அறிவுறுத்துகின்றார்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது —
வேண்டினது வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டும் அவன் பால் (செ.40)

என்ற திருக்களிற்றுப்படியார் பாடலுடன்,

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும் (குறள், 362)

என்ற வள்ளுவர் வாக்கு ஒப்புநோக்கத்தக்கது.

## சீவன் முத்தர் இயல்புகள்

தொங்கிக் கொண்டிருக்கும் மணியின் நா ஓசை எழுப்பும். ஆனால் நிலத்தில் ஆதாரமாக வைக்கப்பட்ட மணியின் நா ஓசை எழுப்பாது. அதுபோல் திருவருளே ஆதாரமாக வாழும் சிவஞானிகள் இவ்வுலக பந்தங்களால் அலைப்புறார் என்று ஆசிரியர் (செ.32) அறிவுறுத்துகின்றார் மேலும் அவர்கள் உலகப் பற்றற்றவர்கள் என்பதற்குச் செத்தார்களை உவமையாகக் கூறுகின்றார் (செ.39)

"உடம்பொடு செத்திட்டிருப்பார்
சிவயோகியார்களோ" (திருமந்திரம் 121)

என்ற திருமூலர் வாக்கு இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. திருஞானசம்பந்தர் பாலை நெய்தலாகும்படிப் பாடியதையும், திருநாவுக்கரசர் பாம்பு கடித்து இறந்த பாலனை உயிர்ப்பித்ததையும், சுந்தரர் முதலையுண்ட பாலனை மீட்டதையும் சான்றுகளாகக் காட்டிச் சிவஞானியர்களின் கரணங்களெல்லாம் சிவகரணங்கள் என்பதை ஆசிரியர் அறிவுறுத்துகின்றார். (செ.12)

அருட்சக்தியுடன் கூடிய சிவபெருமான் ஞானிகட்கு நனவிலே புலனாம் வண்ணம் கலந்து தோன்றித் தனது செயல்களை அவர்கள் வாயிலாகச் செய்வித்து, அவர்களுடையவனாகத் தோற்றுவிப்பான் என்பதை அறிவுறுத்த ஆசிரியர் சமயாசாரியார் நால்வர் செய்த அற்புதங்களைச் சான்றுகளாகத் தருகின்றார். (செ. 69—73).

## அச்சம் நீங்கியவர்கள்

"அம்மையிலும் இம்மையிலும் அச்சந் தவிர்த்தடியார் (செ.74) என்று திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் கூறுவதுடன்

"அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க"
(திருவண்டப்பகுதி வரி 98)

"அச்சம் இலர் பாவம் இலர் கேடும் இலர் அடியார்
" (1:18:2) என்பன போன்ற திருமுறைத் தொடர்கள் ஒப்புநோக்கத்தக்கன.

## ஆசாரம் இல்லை

வழிபாட்டிற்குரிய காலம், இடம், திசை, இருக்கை என்பவற்றைப் பற்றிய நியமங்கள் சிவஞானிகட்கு இல்லை என்று திருக்களிற்றுப்படியாரின் ஆசிரியர் கூறுகின்றார் (செ.60)

ஞானமதின் ஞானநிட்டை உடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவ தொன்று இல்லைச்

சீலமிலைத் தவம்இல்லை விரதமொடு ஆச்சிரமச்
செயலில்லைத் தியானமில்லைச் சித்தமலம் இல்லைக்
கோலம் இல்லைப் புலனில்லைக் கரணமில்லைக்
குணமில்லைக் குறியில்லைக் குலமுமில்லைப்
பாலருடன் உன்மத்தர் பசாசர் குண மருவிப்
பாடலினொடு ஆடல் இவை பயின்றிடினும் பயில்வர்" என்று அருணந்திசிவாசாரியார் (சிவஞானசித்தியார் சுபக்கம் செ.284) வாக்கு இங்கு ஒப்புநோக்குதற்குரியது.

## இறைவனை இதயத்தில் இருத்தியவர்

சிறிய ஆலம் விதை பெரிய ஆலமரத்தை தன்னகத்ததே அடக்கி நிற்றல் போல கண் போன்ற புறக்கருவிகளாலும், மனம் போன்ற அகக் கருவிககளாலும் அறிதற்கரிய கடவுளை மனமும் கண்ணும் களிகூரும்படி தம் இதயத்தில் சீவன் முத்தர்கள் அடக்கியவர்கள் (செ.48)

"வானத்தான் என்பாரும் என்க மற்றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம்என்க — ஞானத்தால்
முன்னஞ்சத்தால் இருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான்
என் நெஞ்சத்தான் என்பன் யான்"
(அற்புதத்திருவருந்தாதி, செ.6)

என்ற காரைக்காலம்மையார் பாடல் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

## உலகவாதனை இல்லை


சிவனோடு ஒருமைப்பட்ட உள்ளம் உடையவர்கள் அவர்கள். ஆதலால் அவர்கட்கு உலகவாதனை இல்லை என்பதற்குத் திருக்குறிப்புத் தொண்டநாயனார், அரிவாட்டாய நாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், மூர்த்தி நாயனார், மூர்க்க நாயனார் இவர்களை ஆசிரியர் சான்றுகளாகக் காட்டுகின்றார் (செ.50)

## சிவஞானியர்கள் இயல்பு

அவர்களின் அருளால் உலகம் ஆக்கமுறும். வெகுளியால் உலகம் அழியும். சிவஞானிகளின் சினத்திற்கு ஆளாகுபவரிடம் செல்வமும், கல்வியும், புகழும் தங்கா என்று ஆசிரியர் அறிவுறுத்துகின்றார். (செ.21)

## முடிவுரை

1. திருக்களிற்றுப்பாடியாரின் ஆசிரியர் திருவுந்தியார் ஆசிரியரின் மாணாக்காரின் மாணாக்கர்.
2. திருவுந்தியாருக்கு விளக்கமாக செய்யுள் நடையில் அமைந்த நூலாகும்.
3. இந்நூல் ஓர் அனுபவநூல். சைவசிந்தாந்தக் கருத்துக்கள் தருக்க முறையில் இந்நூலில் கூறப்படவில்லை.
4. தத்துவராயர் தம் பெருந்திரட்டு நலில் இந்நூலின் மூன்று பாடல்களை எடுத்தாண்டுள்ளார்.
5. ஒரு பாடல் சைவசமயத்தின் சிறப்பை எடுத்துரைக்கின்றது.
6. ஆசிரியர் சிவஞானியர்களின் கரணங்கள் சிவகரணங்கள், அவர்கள் செயல்கள் சிவன் செயல்கள் என்பதை விளக்க, சமயாச்சாரியர்கள் செய்த அற்புதங்களையே சான்றுகளாகத் தருகின்றார்கள்.
7. இது சமயாச்சாரியார் ஆற்றிய அற்புதங்களை உண்மையோ, புனைந்துரையோ என்று ஐயுறுவார்க்கு அவர்கள் இத்தகைய அற்புதங்களை ஆற்றி இருக்க முடியும் என்ற தெளிவை உண்டாக்குகிறது.
8. சமயாச்சாரியார்கள் பற்றி ஆய்வு செய்பவர்கட்கு இந்நூல் ஒரு புறச்சான்றாக அமையும்.
9. சைவசித்தாந்தம் கூறுகின்ற நால்வகைச் சாதனை நெறிகளை இந்நூல் சிவதன்மம், சிவயோகம், சிவஞானம் என்று மூன்றாகக் கூறுகின்றது.
10. சிவதன்மத்தை மெல்வினை, வல்வினை, என இரண்டாகப் பாகுபடுத்திக் கூறுகின்றது.
11. சிவயோகத்தையும் ஆதாரயோகம் நிராதார யோகம் என இரண்டாகப் பாகுபடுத்திக் கூறுகின்றது.
12. சித்தாந்த உண்மைகளைப் படிப்பவர் மனத்தில் பசு மரத்தாணிபோல் பதிய வைக்க உவமைகள் பலவற்றை இந்நூலாசிரியர் கையாண்டுள்ளார்.
13. நற்கருத்துக்கட்கு ஒப்பான திருமுறைக் கருத்துக்கள் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளதால் சித்தாந்தக் கருத்துகட்கு அடிப்படை திருமுறைகள் என்பது தெளிவாகும்.
14. திருமுறைக் கருத்துக்களை மட்டுமல்லாமல் பாடல் தொடர்புகளையும் ஆசிரியர் எடுத்தாண்டுள்ளார்.
15. பாடல்கள் சில திருக்குறள் கருத்துக்களையும், தொடர்களையும் தழுவி அமைந்துள்ளது.
16. முன்னோர்களின் கருத்துக்களை மட்டுமல்லாமல் மொழியையும் பொன்னே போல் போற்றியுள்ளமை இதனால் புலனாகும்.
17. ஆசிரியர் திருமுறைகளில் தோய்ந்த புலமையும், திருமுறை ஆசிரியர்களிடத்தும், சிவனடியார்களிடத்தும் ஆழ்ந்த பக்தியும் உடையவர் என்பது புலனாகும்.



கடவுளைக் கும்பிட்டால் காசு தருவார் வசதிகள் எல்லாம் தருவார் என்று உண்மையான கடவுள் என்று நினைத்துக் கல்லுச் சிலைகளுக்கு அபிஷேகம் ஆராதனை செய்யப்படுகின்றது. பெறுமதியை அறியாமல் வாழ்பவர்கள் இறைவனின் அனுக்கிரகத்தை சிறிதளவாவது பெறமுடியாது. தாய் தந்தையரின் ஆசீர்வாதம் யாருக்குக் கிடைக்குதோ அவர்களுக்குத்தான்

# வணங்கப்பட வேண்டியவர்கள் வதைக்கப்படுகிறார்கள்.



இறைவனின் பேரருள் கிடைக்கின்றது. எங்கள் ஒவ்வொருவருக்கும் தாய் தந்தையை நிர்ணயித்தவர் இறைவனேயாவார். இறைவன் தாய் தந்தையர் உள்ளே இருந்து கொண்டு அவர்கள் மூலமாக எம்மைப் படைத்துக் காக்கும் தனது செயல் பாட்டைச் செய்கிறார். இந்த அரிய உண்மையை அறிந்த பெரியோர்கள் தாய் தந்தையே எமது முதல் ஆலயம். அவர்களே நாம் வணங்க வேண்டிய முதல் தெய்வங்கள் என்ற உண்மையை எமக்கு உபதேசித்தார்கள். கடவுள் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைத்துள்ளான். உதாரணமாக காற்றிலே ஆவியுருவிலும், நிலத்திலே ஈரமாகவும் உயிரினங்கள் மரஞ்செடிகள் எல்லாவற்றிலும், கடல் குளம் நதி எங்கும் தண்ணீர் உண்டு. ஆனால் எமது தேவைக்குக் கிணற்றிலோ அல்லது பைப்பிலோதான் எடுக்க முடியும். அதே போல இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அவனுடைய அருளைப் புனித ஆலயங்களிலும் மந்திரங்களினால் உருவேற்றி வைத்திருக்கும் ஆலயங்களிலும் பெறலாம். ஆனால் இந்த அருளைப் பெறுவதற்கு தாய் தந்தையரின் ஆசீர்வாதம் இல்லாதவர்களால் முடியவே முடியாது.

ஆனால் கடவுளே மனித உருவங்களாகத் தாய் தந்தையராக எம்மைப் படைத்து (பெற்று) காத்து (வளர்த்து) இந்த உலகிலே நாம் மனிதர்களாக வாழ வழி வகுத்த உண்மையான தெய்வங்களுக்கு வதை நடக்கிறது.

புராணக் கதைகளிலே பிள்ளையாரின் மாம்பழக் கதையைத் தெரியாத சைவ மக்கள் இருக்க முடியாது. ஆனால் அதன் அர்த்தம் தெரிந்தவர்கள் எத்தனைபேர்? உலகத்தைச் சுற்றி வந்தாலும் பேரும் புகழும் பணமும் பெற்றாலும் தாய் தந்தையரின் தாய் தந்தையை மதித்து வணங்காத மனிதருக்கு ஆலயங்களில் மந்திரத்தால் உருவேற்றி வைத்திருக்கும் தெய்வீக அலையானது அவர்களுக்கு எந்த நன்மையும் அளிக்காது. பதிலாக ஆலயத்தின் புனிதம் சிறிது குறைந்துவிடும். ஆனால் தாய் தந்தையை வணங்கும் பக்குவம் உள்ளவர்கள் இறைவனின் நேரடி அருளைப் பெறுகிறார்கள். இப்படியானவர்கள் ஆலயத்துக்குச் செல்லும்போது ஆலயத்தில் உள்ள தெய்வீக அலை அதிகரித்து ஆலயத்தையே புனிதமாக்கும்.

தாய் தந்தையரை இங்கு வரவழைத்து அவர்களைத் தெய்வம் போல் போற்றி அவர்களுக்கு ஒரு குறையும் இல்லாமல் வாழவைக்கும் பிள்ளைகளையும் மருமக்களையும் அடியேன் பார்த்திருக்கிறேன். இப்படியான பிள்ளைகள் மருமக்களின் வாழ்வும் அவர்கள் பிள்ளைகளின் சந்ததிகளும் சிறப்போடும் செழிப்போடும் விளங்கும் ஆனால் தாய் தந்தையரை இங்கு வரவழைத்து அவர்களை அரசாங்கப் படிப்பணத்தைப் பெறும் பிணைப் பொருள்களாகப் பாவித்து வீட்டிலே சிறைக் கைதிகளாக்கி வதைக்கும் கொடுமை? இப்படியான பிள்ளைகளுக்குத் தெரியவில்லை தாங்கள் செய்வது தமக்கே எதிர்காலத்தில் வரப்போகின்றது என்று.

பெற்றோரை மதிக்காதவர்கள் ஆலயத்துக்குச் சென்று அர்ச்சனை அபிஷேகம் அன்னதானம் திருவிழா என்று எதைச் செய்தாலும் இறைவனின் அருள் ஒரு துளிகூடக் கிடைக்காது. பதிலாக ஆலயத்தின் தூய்மையும் புனிதமும் இவர்களால் குறைந்துவிடும். ஆனால் தாய் தந்தையரின் பாதங்களைத் தொட்டு வணங்குபவர்கள் ஆலயத்துக்குச் சென்று செய்யும் பூசையை இறைவன் மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்கிறார். அத்தோடு அவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களையும் அளிக்கிறார். இந்த ஆழமான வேதாந்தத்தை அறிய வைப்பதுதான் உண்மையான சமய சேவை. இந்த வேதாந்தத்தை அறிந்து வாழ்வதுதான் உண்மையான சமய வாழ்க்கை.

புட்டப்பர்த்தியிலே பகவான் சாயி பாபா தனது பிறந்த தினத்தினங்களிலே காலையில் தனது பெற்றோரின் சமாதிக்குச் சென்று எண்ணெய்வைத்தே முழுகச் செய்வார். பல சாயி பக்தர்கள் தாய் தந்தையரைத் தினமும் வணங்கிப் பேரருள் பெற்று வாழ்கிறார்கள். இதை அறியாது தாய் தந்தையை மதிக்காமல் பஜனை செய்வதாலும் யாத்திரை செல்வதாலும் பயன் ஏற்படமாட்டாது. தாய் தந்தையை வதைப்பவர்கள் எதிர்காலத்தில் தங்கள் பிள்ளைகளால் வதைபடப் போவதை நினைத்தால் உண்மையில் வேதனைதான். இவர்கள் அறியாமையால் கொடுமைப்படுகிறார்கள். தாய்தந்தையரோ பிள்ளைப் பாசத்தால் வெளியில் சொல்ல முடியாத வேதனை. தாய் தந்தையைக் கொடுமைப்படுத்துபவர்கள் தங்களுக்குள் கணவன் மனைவி உறவில் போலியாகவும் ஒற்றுமை இல்லாமலும் நாய்கடி பூனைகடியாக பிரச்சனையோடு சச்சரவோடு வாழ்கிறார்கள். இதனால் இவர்களது பிள்ளைகளின் வாழ்வும் பணம் இருந்தாலும் பாழாகிவிடும் பணம் பணம் என்று அலைவதனால் பாவச் செயல்கள் அதிகரிக்கின்றன. தொடர் மாடிக் கட்டிடங்களில் வாடகைக்கு இருக்கும்போது குளிர் தெரிவதில்லை. மின்விளக்கு வெளிச்சம் குறைவதில்லை. தினமும் குளித்துச் சுத்தமாக இருக்க முடிகிறது. ஆனால் சரியான வசதி வருமுன்பு மற்றவர்களைப் பார்த்து பேராசையால் வீட்டை வாங்கி குளிரிலும், மங்கிய இருளிலும், அரை குறைக் குளிப்போடும் சுத்தமில்லாமல் மாட்டை விடக் கேவலமாக இரண்டு வேலை செய்து ஓய்வில்லாமல் அலைந்து கொண்டு பெற்றோரையும் வதைத்துக் கொண்டு எதைக் காணப்போகின்றார்கள்?

இத்தனை காரணத்துக்கும் முதல்காரணம் "அறிவில்லாப் பெண்டிர்" இதைத்தான் ஔவையர் பாடினார் எல்லாவற்றிலும் விட மிகக் கொடியது பேயைவிடவும் கொடியது "அன்பில்லாப் பெண்டிர்" அன்பில்லா தவளிடத்தில் நல்அறிவு சிறிதும் இருக்காது. தனது மகனுக்கு கொழுத்த சீதனம் வாங்க வேண்டுமென்று அலையும் பெற்றோர்களே இன்று அதிகமாக வேதனைப்படுகிறார்கள். பெண் எடுக்கும் பெற்றோர் சீதனப் பேராசையால் தங்கள் வாழ்வுக்கு தாங்களே மண் அள்ளிப்போடுகிறார்கள்.

பெண்பிள்ளைக்குச் சீதனம் கொடுத்து கௌரவத்தை உயர்த்த நினைக்கும் பெற்றோர் தர்மம் செய்யாமல் சேர்த்த பணத்தை சீதனமாக கொடுத்து என்ன பயன்? தனது மகளை பண்புள்ளவளாக, அடக்கம் உள்ளவளாக, குடும்பத்தைப் பொறுப்போடு நடத்துபவளாக, ஒவ்வொரு காரியங்களையும் செய்யும் போது அதன் பலன் எப்படி ஆகும் எனும் புத்திக் கூர்மை உள்ளவளாக வளர்த்து விடும் பெற்றோர்களே சிறந்த பெற்றோர்.

காம ஆசைக்கு காதல் எனும் பெயர்வைத்து தமக்கே பொறி வைக்கிறார்கள். ஆண் பிள்ளைகள், பெண்பிள்ளைகளுக்குச் சேர்த்துக் கொடுக்க வேண்டிய சீதனம் பண்பு, பணிவு, நல்லடக்கம், புத்திக்கூர்மை, இந்தப் பண்புகள் உள்ள பெண்ணே வீட்டுக்கு மகாலட்சுமியாக வீட்டைக் கலகலப்பாக பிரகாசிக்கச் செய்வாள். நற்பண்பு புத்திக்கூர்மை இல்லாத ஒரு பெண் உங்கள் வீட்டில் மருமகளாக நுழைந்தால் உங்கள் வீட்டில் அலங்காரமான ஒரு பேய் நுளைகிறது என்று புரிந்து கொள்ளுங்கள். நல்ல பெண் குடும்பத்துக்கு வாய்த்தாலும் புத்தி இல்லாத மாமியார் அமைந்து விட்டால் அந்த வீடும் நரகமேதான். வீட்டில் பெண்ணா? பேயா?

—அடியார் விபுலானந்தா—

—கனடா—

# கலசம்சந்தாப் படிவம்

பெயர்: ..........................................................

..........................................................

முகவரி:..........................................................

..........................................................

..........................................................

..........................................................

தொலைபேசி இலக்கம்:..........................................................

விபரம்:

2 வருடங்கள் (பிரித்தானியா)
= 10 பவுண்

2 வருடங்கள் (ஐரோப்பா)
= 14 பவுண்

2 வருடங்கள் (ஏணைய நாடுகள்)
= 24 பவுண்

..........................................................

**அலுவலக உபயோகத்திற்கு:.**

சந்தா இல: ..........................................................

சந்தா பெற்றுக் கொண்ட திகதி:..........................................................

சந்தா முடிவடையும் திகதி:..........................................................


# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC**

**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**

**MAIN AGENT FOR AIRLANKA**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

# GLEN CARRIERS LIMITED

**14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ**

**Tel: 0181 740 8379/ 0181 749 0595**

**Fax: 0181 - 740 4229 Telex: 929657 Glenca G**

**BONDED WAREHOUSE**

**LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14, TEL: 575576**

# போலி செயற்பாடு போகட்டும் ..........

ப.வை ஜெயபாலன்




வையத்தில் எத்திக்கும்
வளர் தமிழும் முக்கலையும்
சைவத்தின் ஊடு தவழ விட்ட பெருமாட்டி
தாயே சரஸ்வதியே
தமிழ் அன்னை மாரியம்மா
சேய்யான் வணங்குகிறேன்
சேர்ந்திருக்க கவிதருக.

முத்தமிழ்க்கு விழாக்காணும்
முனைவை இந்த சீமையிலே
சித்தத்தில் கொண்டுழைக்கும்
சிவயோக காவலர்காள் !
எத்திக்கும் தமிழ் அழிவு
இயல்பாகும் இன்நாளில்
இத்தரையில் தமிழ் நிமிர
ஏற்றன நீர் ஆற்றுகின்றீர்
பித்தம் தமிழில் நிதம்
பெரிதாக கொண்ட சிவன்
முத்தமிட்டேன் நும்தாள்கள்
முயற்சிக்கென் பெரு வணக்கம்.

வேலன் ஐயா போன்ற
வித்தகர்கள் மற்றும் இங்கு
காலம் எல்லாம் தமிழ் சைவம்
கலை வளர அழைப்பவர்கள்
கோலமுடன் திறன் காட்டி
கொலு இருக்கும் இச்சபையில்
நாவலடிகள் மேடையிலே
நான் உரைக்க அழைப்பளித்த
சிலர் வ.அ.இரகம்
செம்மலுக்கு நன்றிபல.

முன்னைப் பரம் பொருளோ
மூத்த வினாயகனே
என்னுள் தமிழ் ஊட்டி விட்ட
இறை நிகர்த்த ஆசானே
வைத்தியத்தில் பதவிபட்டம்
வாய்த்திருந்தும் தமிழில் உள்ள
பைத்தியத்தால் கவித்துறையில்
பற்று வைத்த கவித்தலைவா !
காட்டாறு போல இங்கு

கவிதை வெள்ளம் புரண்டோட
பாட்டியற்றி வந்துள்ள
பாவலர்கள்! சக கவிஞர்
நீட்டாறு பாய்ந்து இங்கு
நிலவி உள்ள போலிகளை
கூட்டோடு கொண்டு செல்லும்
கொஞ்சுதமிழ் இங்கிருந்து
கேட்போர்கள்! என் வணக்கம்
கிளர்க நுவிகள் தமிழர் ஆர்வம்.

போலிச் செயற்பாட்டை
போர்க்கடிக்க பாட்டெழுத
சோலி வரும் தன்னைத்தான்
சொல்வாள் மேடையிலே
கேலி செய்தீர் நீங்கள் என்று
கிளர்ச்சி வரும் விழா முடிய
நாலு ஐந்து பேரால்
நமக்கேன் வம்பு என்று.....

தலைப்பில் நான் கவி எழுத
தயாரான வேளையிலே
மலைக்க வைத்தாள் என் மனையாள்
மனிதர் இடை அன்பு நட்பு
நிலை நிற்க வேண்டும் என்றால்
நிலவுகின்ற போலி பிழை
எதைக் கண்டும் காணாமல்
இருப்பதுவே சிறப்பு என்றாள்.

இந்த நிலைப்பாடே எம்மில் உள்ள முதல் போலி
சொந்தம் நட்பு முகம் பார்த்தே
சொல்லவரும் பிழை போலி
இந்த நன்நாள் முதலாய்
இவை போக பறந்தோடி

ஆங்கிலமே முழ மொழியாய்
ஆலயத்தில் கலை அரங்கில்
ஈங்கு உள்ள நிலைப்பாடே
எனை வதைக்கும் முதல் தாக்கம்
என்றேன் அவளோ
இதை நீங்கள் போய் சொன்னால்
இன்று இங்கெம் முதன்மை மொழி
இங்கிலீசே என்பர் என்றாள்.
இங்கிலீசே முதன்மை மொழி
இங்கு இது உண்மை ஆனால்
எங்கள் தாய் மொழிக்கு என்றேன்



109

எம் நிகழ்நில் இடம் இல்லை?
பரத கலை இங்கு எங்கள்
பாலகர்கள் பயில்கின்றார்
இந்த வீனை வாத்தியமும்
ஏற்றவரை புகட்டுகிறோம்
நாட்டியத்தில் உடைகள் அணி
நட்டுவாங்க பாட்டுமொழி
பாட்டுணர்ந்தும் குறிப்பு கதை
பலதும் எல்லாம் தமிழ் சொத்தே!

நிகழ்ச்சி நிரல் நோட்டீஸ்
நேர் நிகழ்த்தும் அறிவிப்பு
புகட்டும் மொழி, தலைமை
பொறுப்பேற்கும் தமிழ் பெரியார்
நிகழ்த்தும் உரை, வாழ்த்து
நிறைந்துள்ள விழா மலர்கள்
அனைத்தும் முழு ஆங்கிலமே
அதிலும் ஒரு பெரும்கேடு
பல்லவி ராகம் பாட்டு என்ற
தமிழ் சொற்கள்
நல்லபடி ஆங்கிலத்தில்
நாம்படிக்க தாளில் வரும்

சுந்தரனார் திருமுறையில்
சொல்லி வைத்த தேவாரம்
செந்தமிழோடிசை பாடி
சேவித்த கதை சொல்லும்
இன்தமிழால் இமயத்தில்
இராவணன் தான் இசையாத்து
தன் அழியா வரம் பெற்ற
சரிதம் உண்டு ஈழத்தில்
சிவனோடு உமையாளை
சேவித்த நாயன்மார்
தவம்மேலு உரைத்த மொழி
தமிழா ஆங்கிலமா?

ஈழத்தமிழர் நாம்
எமக்கேற்ற வழிமுறையில்
ஆலயங்கள் அமைத்துள்ளோம்
ஆங்காங்கே சில கோயில்
பூசை அபிடேகம்
போன்ற அறிவித்தல்
ஈது இது தேவை என்று
எடுத்தியம்பும் பட்டோலை
கும்பா அபிடேக குட முழுக்கு



அம்பாளின் விசேட மலர்
அனைத்திலுமே ஆங்கிலம்தான்

ஏகாதசி அமாவாசை
சதுர்த்தி திருவெம்பா
ஆளான பூசை பல
ஆள் பேரில் அரிச்சனைகள்
ஏதேனம் ஒன்றில்
எடும் நீர் உபயம் என்ற
வந்த ஒரு Notice
வைத்திருந்தேன கடையில் அங்கு
வந்த நண்பர் ஆங்கிலத்தாள்
வாசித்தார் அதைப்பார்த்து
என்ன இதன் கருத்து என்றார்
ஏன்முயன்று அறியும் என்றேன்
அவ்விரத சொற்களுக்கு
அகராதி வழி விளக்கம்
தந்துவிடும் என்று தவித்தார்
தான் தேடி
கண்டிலர்தான் கருத்து
கடைசியிலே மீண்டு வந்தார்.

என்னால் இயன்றவரை இங்கிலீசில் அதிலுள்ள
ஏகாதசிக்கு இயலம்பிவைத்தேன் விளக்கத்தை
பின்னர் அவர்கேட்டார்
உங்கள் விரதங்கள்
உங்கள் அர்ச்சனைகள்
உங்களுக்கே அறிவிப்பு
உங்கள் மொழி தமிழ் இருக்க
ஆங்கிலத்தில் பின் ஏன்
அச்சுப்பிரயோகம்?
எனக்கு பதில் சொல்ல இறுதிவரை முடியவில்லை.
ஆங்கிலமும் தமிழ் மொழியும்
ஆலயத்து நிர்வாகம்
சேர்த்துரைத்தால் பொருள் விளங்கும்
தெளிவாகும் தமிழ் வளமும்
ஈங்கிதனை கவனத்தில்
எடுத்து செயற்படுத்த
ஆங்கிலமே கருமமொழி
ஆக்கிவிட்ட ஆலயத்தார்
தாங்கள் முன்வரவேண்டும்
தமிழ் சைவம் தான் தழைக்க
போலிச் செயற்பாடு போயலே பரிதாபி
பாலித்தளெட்டும் பயன்கள்.



# சிறுவர் கலசம்

வணக்கம்!

பெற்றார்களே! சிறுவர்களே!

இந்த இதழ் எமது 29ஆவது இதழ். இம் முறை உங்களுடைய சிந்தனைகளைத் தூண்டக்கூடிய பல கட்டுரைகளை உமக்குத் தருகின்றோம். இவை தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ளன. தமிழ்க் கட்டுரைகளைப் புரிந்து கொள்ளாவிடின் உங்கள் பெற்றாரை அணுகிக் கேளுங்கள். அல்லது எமக்கு எழுதுங்கள். நாங்கள் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றோம். நீங்களும் எங்களுக்குக் கட்டுரைகள் அனுப்பவேண்டும். உங்கள் அபிப்பிராயங்களை எங்களுக்கு எழுதுங்கள். சிறுவர்களே மேலும் மேலும் எழுதுங்கள். தமிழில்தான் எழுதவேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆங்கிலத்திலும் எழுதுங்கள். நீங்கள் தமிழர்களாக வாழவேண்டுமென்பதுதான் எமது அவா.

–ஆசிரியர்–

# THAI PONGAL



### MONTH - THAI
### OCCURENCE

There are two halves in a year called Uttarayanna (January 15th to July 15th) whereby the sun moves from South to North. This journey to the North is considered auspicious. The first when the sun moves North is called Makara Sankranti or Pongal by Tamilians that is the day when the sun passes from the nineth sign of the zodiac (Rasi) to the tenth sign the Makara rasi. This in the Tamil month of Thai (January - February)

### OBSERVANCE

The pongal festival consists of a four day celebration. The sun - god (surya) is invoked on a traditional lamp and a puja is performed. A new clay pot is decorated with ginger and turmeric stalks with the rhizomes tied around its neck. Kolam and sacred ash marks are placed on this pot. Newly harvested rice is cooked in this new pot over an open fire in the front yard of the house. Stove is made of bricks. The rice is boiled in milk, when it boils and overflows, the family members gather and shout "pongal pongal" (to cook and overflow). The rice is cooked with the correct quantity of water and milk. The excess water is not drained off. The ladies of the house light lamps with ghee. The whole process of cooking as well as the puja are done in an open yard of the house. To signify the worship is direct to the sun - god (Surya).

The sun is directly over the head and the puja is usually done between the hours of 11.00am and 1p.m.

"Be charitable and generous, treat your servants as your friends and co-workers". This is the keynote of the pongal festival. Symbolically the first harvest is offered to the Almighty.

The Sun itself symbolises all that the pongal festival stands for. It is the message of light. Unity, impartiality and true selflessness. without the sun, life would perish on earth. Pongal is a period of thanksgiving.

Special prayers are conducted in temples. On pongal day sweet "pongal" rice and other varieties of vegetarian dishes are prepared. There is a family reunion in all homes. Brothers and sisters renew their ties with the married ones who have gone away to live with their husbands or wives.

Pongal is period of thanksgiving where the entire communities relax after a whole year of struggle with the wind, rain and the sun. Now the people express their gratitude to the Almighty.

The main characteristics of the pongal celebration is still carried out in many Hindu homes here though different social and economic environment of the people here have changed a little of the traditional celebrations.

Many Hindu organisations and Tamil Language Societies put these cultural shows in order to promote and preserve the Tamil culture.

## SPECIAL FEATURES OF THAI PONGAL

The day before Pongal is known as the Bhogi festival. On this day old worn-out and dirty things in the house are discarded and bumt, houses are cleaned and white washed. Beautiful kolams with rice-flour are drawn in and outside the house.

Every family rich or poor must buy clay pots. Another feature in Indian villages is that the carpenter supplies a spatula (wooden spoons) and a ladle. The ladle is a very simple spoon made of coconut shell cup attached to the end of a small bamboo stick. It is used for serving milk or puddings (payasams).

The stove is also set up by each family on the previous day by arranging a few clay bricks and platered with cowdung paste which is dried in the sun in Indian villages. This feature is completely missing in England. Three such stoves are made to provide for three pots to be cooked at the same time for milk, rice and vegetable separately. The sugar cane is also an important item for the celebration of pongal.

## MATTUP-PONGAL

The first day is the Bhogi festival for Indran. The second day is the pongal day a day for surya. The third day is dedicated to the cows - the Mattup - pongal, and the fourth is a day games and sports for adults.

Mattup-pongal is a day of reverence to the cattle. The cattle had been glorified as the giver of all things to human beings. The cow gives man milk while the bull is used for transportation. In Saivism the bull is the mount of Lord Siva.

The cow is the most auspicious object for any food act. Even today the ritual of taking a cow with its calf into a newly built house is carried out during graha-pravesam or new house warming ceremony.


On this day the cattles are given a bath, and their homs are polished and painted. Garlands are put around their necks. After praying to the Surya or Sun-God, a complete puja is performed for the cows.

## KANNIP-PONGAL

The fourth day of the group of pongal celebration is known as kannip-pongal, also called Karinal, an inauspicious day. Therefore no good activity is done on this day. So the entire village put on a holiday mood and sets this day for rural sports and games like "chadu gudu".

The fourth day ends the pongal festival which is truly a social festival where the people are in holiday mood.◈

# திருநாவுக்கரசு நாயனார்




திருநாவுக்கரசு நாயனார் வயிற்றுவலியால் மிகவும் வருந்தினார்.

தம் அக்காவான திலகவதியாரிடம் சென்றார்.

'தம்பி, கோவிலுக்கு போவோம் வா' என்றார் அக்கா.


இருவரும் கோவிலுக்குச் சென்றார்கள்.



‘தம்பி இந்தா திருநீறு, நெற்றியிலே
பூசிக் கொள், சுவாமியை விழுந்து வணங்கு’
என்றார் அக்கா.


'கடவுளே இந்த வயிற்று வலியைத்
தாங்கமுடியவில்லையே'
என்று திருநாவுக்கரசர் அழுதார்.
திருநீற்றைப் நெற்றியில்,
வயிற்றில் பூசினார்.
தேவாரம் பாடினார்.
அவருடைய வயிற்றுவலி மறைந்தது.
அந்தத் தேவாரத்தை
நாமும் பாடுவோம்.

# திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்



கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக்கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே.


# The Frog and The Jackal

**A frog sat on a rock on the bank of a pond and announced loudly, "I have mastered all medical sciences. I am well trained in beauty culture whoever has a problem can come to me."**

**A jackal was passing that way. He said, "Have you mastered all medical sciences? Do you know beauty culture? If so, why you set right your ugly chin? Your belly is big and round like a pot. You can reduce it and remove the ugliness."**


**On hearing this, the frog leaped into the water and disappeared.**

**<u>Reform yourself first and then reform others.</u>**




# மாம்பழக் கதை









சிவபெருமான்
பிள்ளையாரையும்
முருகனையும்
பார்த்தார் முதலில்
உலகைச் சுற்றி
வருபவருக்கே
இந்த மாம்பழம்
என்றார்.



முருகன்
மயில்மேல்
ஏறினார் உலகை
சுற்றிப் பறக்கத்
தொடங்கினார்.
பிள்ளையார்
அம்மை அப்பரைச்
சுற்றி வந்தார்.
உலகை சுற்றி வந்தேன்
என்று வணங்கினார்.

மாம்பழம்
பிள்ளையாருக்கே
கிடைத்தது.

# சைவ முன்னேற்றச் சங்க செய்திகள்

2 Salisbury Road, Manor Park E12

சைவ சமயக் கருத்துணர்வினூடகச் சமூகசேவை

## சங்கத்தின் எதிர்வரும் காலாண்டு நிகழ்வுகள்

**புத்தாயிரம் ஆண்டுப் பிரார்த்தனை – 01–01–2000**

**தைப் பொங்கல் – 15–01–2000**

**சிவராத்திரி – 04–03–2000**

**காரைக்காலம்மையார் குரு பூசை – 22–03–2000**

**சித்திரை வருடப்பிறப்பு, கலசம் 30 வெளியீடு – 13–04–2000**

**இவ் விழாக்களில் கலந்து கொள்ளுமாறு வாசகர்களை அன்போடு வேண்டுகின்றோம். சகல விழாக்களும் மேலே குறிப்பிட்ட முகவரியிலுள்ள சங்க மண்டபமான நால்வர் மணி மண்டபத்தில் நடைபெறும்.**

### பவள விழாக்காணும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மமா அப்பாக்குட்டி

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை நடைமுறையில் கடைப்பிடிக்கும் நெஞ்சில் நிறைந்த எங்கள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு எங்கள் அன்புநிறைந்த வசாழ்த்துக்கள். இவர்களின் பவளவஜழாவினை லண்டன் ரூட்டிங் முத்துமாரியம்மன் ஆலய நிர்வானத்தினருடன் இணைந்து கொண்டாட சைவ முன்னேற்றச் சங்கத ˙தினர் தீர்மானித்துள்னர்.

இடம்: ரூட்டிங் அம்மன் ஆலய மண்டபம்

காலம்: 08–01–2000

### இறுதிக் கிரியைகள்

சைவ முன்னேற்றச் சங்கம் இறுதிக்கிரியைகளை முறைப்படி செய்வதற்காக சைவக் குருக்கள் ஒருவரை ஈழத்திலிருந்து வருவித்துள்ளது. இச் சேவையின் பலன்களை முழுமையாகப் பெற்றுக கொள்ள விரும்பும் அன்பர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

தொலைபேசி இலக்கங்கள்:

01268 766624, 0181 550 2739, 0181 514 4732

### மணிவிழாக்கண்ட மனித சேவையாளன்



தொண்டு நெறியே சைவ நெறி என்றுவாழ்ந்த இப்பெரியோர் சமூகத்துக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன. இப்பெரியோர்களுக்கு மணிவிழா எடுக்கும் நாண்பர்கள் அளப்பரிய பணியொன்றினை முன்னெடுத்துள்ளார்கள். இவ்விழா சிறப்பாக நடந்தமை மனதுக்கு நிறைவைத்தருகின்றது. இவ்விழாவில் வெளியிடப்பட்ட மணிமங்கலம் என்னும் புத்தகத்தைப் பார்த்தபோது மனதுக்கு இன்பமாக இருந்தது இப்பெரியோர் தன் குடும்பத்துடன் மேலும் சேவைகள் புரிந்து நீடூழி வாழவேண்டுமென்று கலசம் குடும்பம் வாழ்த்தி நிற்கின்றது.

–ஆசிரியர்–

# நால்வர் தமிழ்க் கலை நிலையச் செய்திகள்

## தலைமுறை வழியே தாய்மொழி வளர்ப்போம்

கலசம் வாசகர்களுக்கு வணக்கம்.

நாங்கள் சைவ முன்னேற்றச் சங்கத் தமிழ்ப் பாடசாலையின் ஆசிரியர்கள். உங்களுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் பிறக்கவிருக்கும் தைத் திருநாளின் வாழ்த்துக்களையும் மகிழ்வோடு தெரிவிக்கின்றோம்.

மாணவர்கள் தாய் மொழிக் கல்வியை ஒரு முக்கிய அம்சமாகக் கருத வேண்டும் என்கின்ற நோக்கிலும் அதற்குத் தேவையான சூழலை அளிக்க வேண்டும் என்கின்ற திட்டத்துடனும் இந் நாட்டில் பல தமிழ்ப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இதே நல்லெண்ணத்தில் East Ham பகுதியில் கடந்த பத்து ஆண்டுகளாக எமது தமிழ்ப் பாடசாலை நடைபெற்று வருகின்றது.


இந் நாட்டில் பிறந்து வளரும் பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்பதற்கு வீட்டுச் சூழ் நிலை போதியளவு இடம் தருவதில்லை என்பது வருந்தத்தக்க உண்மை. இத்தகு சிரமமான நிலையிலும் வீடுகளிலேயே தமது பிள்ளைகளுக்குத் தமிழ் மொழியைக் கற்றுக் கொடுக்க முன் வரும் பெற்றோரை இந்தச் செய்தி மூலமாகப் பாராட்டுகின்றோம். அவர்களது தொலை நோக்கிற்கும் பண்பாட்டிற்கும் நாம் தலை வணங்குகின்றோம். ஆனால் இத்தகைய சிந்தனையின்றி எமது மொழியை எழுதப் பேசத் தெரிவது முக்கியமில்லை அல்லது தற்போது அவசியமில்லை என்று கருதும் பெற்றோரை நோக்கி இச் செய்தியைப் பணிவுடன் அனுப்புகின்றோம்.

உங்கள் பிள்ளைகள் ஆங்கிலம், மற்றும் கல்வித் திட்டத்துடன் தொடர்பான ஏனைய ஐரோப்பிய மொழிகளில் சிறந்த புள்ளிகள் பெற வேண்டும் என்று பல வகையிலும் வழிகளை வகுத்துக் கொடுக்கின்றீர்கள். உற்சாகப்படுத்துகின்றீர்கள். விளையாட்டுத் துறைகளிலும் அவர்கள் முன்னேற வேண்டும் என்கின்ற இயல்பான துடிப்பு உங்களை இன்னும் வேகமாக இயக்குகின்றது. நேரம், பணம், எண்ணம் என்று பல வழிகளிலும் உங்களை இத் தேவைகளுக்காக நீங்கள் பகுத்துக் கொள்ள முன் வருகின்றீர்கள். ஒரு தாயோ இல்லை தந்தையோ தான் பெற்ற அருமைக் குழந்தைக்காக இவை அனைத்தையும் செய்ய முன் வருவது நல்ல பெற்றோருக்குரிய உயர் குணங்களே. ஆனால் அதே ஈடுபாடும் ஊக்கமும் தாய் மொழியைக் கற்பிப்பதில் இல்லாதிருத்தல் மனவருத்தத்தைத் தருகின்றது.
எமது பிள்ளைகள் எமது பெயரையும் புகழையும் நிலை நாட்ட வேண்டும் என்று ஒரு சாரரும். தமது பிள்ளைகள் மூலமாகத் தமது தனிப்பட்ட எண்ணங்கள் நனவாகிவிட வேண்டுமென இன்னொரு சாரரும் இரவும் பகலும் அங்கலாய்க்கின்றனர்.
ஒரு கிழமையில் இரண்டு மணித்தியாலங்கள் பிள்ளைகள் தமிழ்க் கல்வியைப் பயில ஊக்குவிக்காத பெற்றோர்களைப் பார்த்து வேதனைப்படுகின்றோம். இந்த நிலையை மாற்றி அமைப்பதற்காகவே இயங்குகின்ற தமிழ்ப் பாடசாலைகளுள் ஒன்று நால்வர் தமிழ்க் கலை நிலையம். தவணை நாட்களில் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் 12 மணி வரை இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கு எதிரில் அமைந்துள்ள Little Ilford School கட்டிடத்தில் ஏழு வகுப்பறைகளில் ஆர்வமும் தொண்டாற்றும் நோக்கமும் கொண்ட ஆசிரியர்கள் சைவ முன்னேற்றச் சங்கத்தின் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். தமிழ் மொழிக் கல்வியைப் புகட்டுவதை முக்கியமாகக் கருதும் நாம் மேற் குறிப்பிட்ட நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வாய்ப் பாட்டு, மிருதங்கம், பரத நாட்டியம், வீணை, வயலின் ஆகிய கலை வகுப்புக்களையும் சைவ சமய பாட வகுப்பு மற்றும் திருமுறை வகுப்புக்களையும் நடத்துகின்றோம். கலை வகுப்பு மாணவர்களுக்குத் தேவையான இசைக் கருவிகளை அவர்கள் எமது கலை ஆசிரியர்களிடம் கலை வகுப்புக்களைப் பயிலும்வரை பயிற்சிக்காக வழங்கி ஊக்குவிக்கவும் முன் வந்துள்ளோம்.

இப் பாடசாலையின் ஊடாக இன்னும் பல மாணவர்கள் பலனடைய வேண்டும் என்கின்ற நோக்கில் உங்களது கவனத்திற்கு இந்தச் செய்தியை பணிவுடன் எழுதியுள்ளோம். ஆதரவு தாருங்கள். தமிழ் சொல்லிக் கொடுக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது உங்களது கடமை.

இது சம்பந்தமாக நீங்கள் மேலும் அறிந்து கொள்ள விரும்பின் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் வருமாறு:
**0181 924 6492, 01268 766624, 0181 550 2739**

# சிந்திக்கத் தொடங்கிய இளந் தலைமுறையினர்



21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆக்க பூர்வமான ஒரு விழாவைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். கலைகள் மக்களுக்காகவே என்ற மாக்சீயவாதிகளின் குரலை நியாயப்படுத்துவது போல் அவ்விழா அமைந்திருந்தது. 10 வயதிற்க்கும் 17வயதிற்க்கும் இடைப்பட்ட சிறுவர்கள் தாங்களாகவே தாங்கள் கற்ற கலைகளைத் தயாரித்து நம் நாட்டு மக்களின் துயர் துடைப்புக்காக கலைகளை அர்ப்பணம் செய்து கொண்டிருந்த அவ்விழாவை எப்படிப் பாராட்டுவது? லண்டன் மாநகரிலே வித்துவச் செருக்கு கொண்ட கலை ஆசிரியர்கள் எல்லோரும் வாயடைத்துப் போய் பார்வையாளர்களாய் அமர்ந்திருக்க அவர்களை யெல்லாம் மீறி மேடையிலே பிள்ளைகள் அர்ப்பணித்த கலை பார்வையாளர்களின் பாராட்டை பாரறிய பெற்றுக் கொண்டது. இம்முயற்சிக்கு முன்னின்றுரைத்து பாலாஜி கிருஸ்ணமூர்த்தியையும் சிவதர்சினி சிவராச சிங்கத்தையும் எப்படிப் பாராட்டினாலும் தகும். இனியாவது எங்கள் கலை ஆசிரியர்கள் கண் விழிப்பார்களா? என்ற ஆதங்கத்துடன் மன நிறைவோடு மண்டபத்தை விட்டு சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தேன்.





-லண்டன் குருவி-

# புத்தாயிரத்தில் மேன்மை கொள் சைவநீதி உலகெல்லாம் ஓங்கட்டும்

பற்றிமாகரன் B.A.Special Dip (Oxfprd University), B.Sc, MA.

சைவத்திற்கு அடைமொழி மேன்மைகொள் சைவநீதி. நீதி சைவ சமயத்தின் அடித்தளம். நீதியில்லையேல் அங்கு சைவ மதமும் அர்த்தமற்றதாகி விடும். சைவ சமயத்தில் இறைவன் நீதியின் வடிவம். சைவத்தில் சிவபெருமானின் வாகனம் எருது. எருது அறத்தின் சின்னம். இறைவன் எழிலுக்கு சின்னமாக விளங்கும் யானையின் மீது எழுந்தருளாது அறத்தின் சின்னமான எருத்தின் மீது எழுந்தருளுதல் இறைவன் நீதியை நிலைநாட்டும் பண்பினைக் கொண்டவன் என்ற மகத்தான உண்மையை உணர்த்துவதற்காகவே என்கிறார் திருஞான சம்பந்த சுவாமிகள்.

கடுமணி உமிழ் நாகம் சூழ்தர அரைக்கசைத்தான்
இடுமணி எழிலானை ஏறலன் எருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டு
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே

இவ்வாறாக எருது நீதியின் சின்னமாகக் கருதப்பட்டதினாலேயே தமிழீழ மக்களாகிய நமது கடைசி தமிழரசாகிய யாழ்ப்பாண அரசின் தேசக் கொடியாகவும் எருது தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் நீதி வழுவாத் தன்மையை உலகிற்கு உணர்த்தியது.

நாம் பேசும் அறம் தருமம் சத்தியம் என்ற சொற் தொடர்களின் உண்மை அர்த்தங்களை விளங்கிக் கொள்வதற்கு மேன்மை கொள் சைவ நீதி மூலம் அச்சொற்றொடர்கள் பெற்ற பொருள்களை தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். அத்துடன் ஆரோக்கியமான சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நமது விழுமியங்கள் எவ்வாறு திகழ்ந்தன நாடு அடிமையுறும் காலகட்டங்களில் அவ்விழுமியங்களில் எவ்வாறு ஆதிக்க சக்திகள் மாற்றங்களைக் கொண்டு வந்து நமது சமூக பொருளாதார அரசியல் ஆன்மீக ஒருமைப்பாடுகளைச் சீர்குலைத்து நமது வாழ்வை அடிமை வாழ்வாக்கின என்பதெல்லாவற்றையும் மேலும் மேலும் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். இவைகளை அறிந்து அவற்றுக்கேற்ப சரியான மாற்றங்களைச் செய்வதன் மூலம் மேன்மை கொள் சைவ நீதியினை புத்தாயிரம் ஆண்டில் புதுப்பொலிவுடன் உலகெல்லாம் ஓங்கியொலிக்கச் செய்ய வேண்டிய கடமை தமிழர்களுக்கு உண்டு. இந்த நோக்கங்களின் பின்னயிணிலே சில சிந்தனைகளை கலசத்தின் 2000 மாவது ஆண்டு முதல் மலரில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

மக்களைத் தாக்குவது
காப்பதற்குப் போராடுவது மகத்தான தருமம்

அறம் என்றால் செய்யத்தக்கன இவை செய்யத்தகாதன இவை என வரையறுத்து கூறுவது. இது நீதி நெறி என்றும் வழங்கப்படும். ஆனால் தருமம் என்ற வடமொழி வழி வந்த தமிழ்ச் சொல் அறத்தை மட்டும் குறிக்கவில்லை. எந்தத் தெய்வ சக்தியானது அல்லது கொள்கையானது மக்களை இகத்திலும் பரத்திலும் அழிவுறாமல் துன்புறாமல் தாங்குகின்றதோ அல்லது காத்து உதவுகின்றதோ அது தருமம் என்கிறது மகாபாரதம். ஆகவே மக்களை அழிவுறாமல் துன்புறாமல் தாங்குகின்ற பொழுது ஒருவன் தருமம் செய்தவனாகின்றான். இதனால் மக்களை அழிவில் நின்று காக்கும் போராட்டமும் தர்மத்தின் பாற் பட்டதாகையினால் அது தருமப் போராட்டம். எது இருக்கின்ற ஒன்றாக உள்ளதோ அது உண்மை அல்லது சத்தியம். எது இருக்கின்ற ஒன்றை மறுக்கின்றதோ அல்லது மறைக்கின்றதோ அது பொய்மை அல்லது அசத்தியம் எனப்படும். எனவே இருக்கின்ற ஒன்றை நிலைநாட்ட ஒவ்வொருவரும் போராட்டக் கடமைப்பட்டுள்ளனர். அத்தகைய போராட்டம் சத்தியப் போராட்டம் எனப்படும். சத்தியம் என்பதே இறைவனுக்கு முதன் முதலில் கொடுக்கப்பட்ட பெயர். ஆகவே சத்தியத்துக்கான போராட்டமும் ஆன்மீகமே. அவ்வாறே தருமம் செய்தல் என்பது வெறுமனே உணவளிப்புடன் நிதியளிப்புடன் சம்பந்தப்பட்ட ஒன்று மட்டுமல்ல. மக்களை அழிவுறாமல் தாங்குகின்ற போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய மகத்தான கடமையாகவும் அமைகிறது.

தருமம் அறத்தின் அடித்தளம் — அறம் நீதியின் அடித்தளம். இந்த தருமத்தை சத்தியத்தை நிலைநாட்டும் போராட்டம் தனிமனித சமுக நிலையிலும் இடம்பெறல் வேண்டும். இந்த இயக்கத் தன்மைதான் அறத்தைப் பிறப்பிக்கும் எது

செய்யத்தக்கது எது செய்யத் தகாதது என்பவற்றை பிறப்பித்து அறத்தை வடிவமைக்கும். அந்த அறத்தை — செய்ய வேண்டியவற்றை செய்ய வேண்டுமென்று தூண்டும் மனித உணர்வுதான் அன்பு.

அந்த அறத்தை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் தான் நட்பாக உறவுகளாக மலரும் என்பது வள்ளுவரின் நம்பிக்கை.

அன்புஈனும் ஆர்வமுடைமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு

மேலும் இல்லற உறவைப் பற்றி பேச வந்த வள்ளுவர் அன்பு மட்டுமல்ல இல்லற வாழ்வுக்கு அறமும் முக்கியமானது என்பதை வலியுறுத்த

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

என்று கூறிச் செல்வதைக் காணலாம். ஆனால் அதே வள்ளுவர் அறத்தினை நிலை நிறுத்துவதற்கு வீரம் இன்றியமையாதது என்பதை உணர்த்தவும் தவறவில்லை.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

என்று கூறும் வள்ளுவர் அறத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற உணர்வு தன்னலமற்ற அன்பினால் ஏற்படுவது. அந்த உணர்வைச் செயற்படுத்துவற்கு வீரம் துணையாதல் வேண்டும். அரசியல் பிழைத்தார்க்கு அறங் கூற்றாகும் என்னும் இளங்கோவின் அர்த்தமுள்ள வரிகளும் அரசியலில் அறத்தை நிலைநாட்ட மறத்தின் தேவையினை வலியுறுத்துகின்றது. இவ்வாறாக பக்கசார்பு அற்ற நிலையில் அறத்தை நிலைநாட்டுதலே நீதி எனப்படுகிறது. இது வாழ்வின் எல்லா நிலைகளிலும் நிலைபெறும் பொழுது வாழ்வு அறவழி வாழ்வாகின்றது. அறத்தை நிலைநாட்டுவதற்காக நீதியை நிலைநிறுத்துவதற்காக தம்மையே அர்ப்பணிக்கும் மாவீரர்கள் மனித வடிவிலான தெய்வங்களாகின்றனர்.

## நீதியின் பாற்பட்டது ஊழ்வலிக் கோட்பாடு

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

என்பது வள்ளுவர் ஊழின் வலிமையை அடித்துக் கூறும் குறள். மேன்மை கொள் சைவ நீதியைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் சைவம் கூறும் கருமக் கோட்பாடு என்று அழைக்கப்படும் ஊழ்வலிக் கோட்பாட்டை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். கருமக் கோட்பாடு என்பது இருபெரும் பகுதிகளை உடையது. முதல் பகுதியில் ஒருவரின் இன்றைய வாழ்வு அவர் முன்பு செய்த செயல்களின் அடிப்படையில் அமையும் என்பது. இது நீதியின் பாற்பட்டது. ஒவ்வொரு தாக்கத்துக்கும் எதிர்த்தாக்கம் உண்டென்ற நியூட்டனின் விதி போன்றது. இரண்டாம் பகுதி அதைவிட முக்கியமானது. ஒருவருடைய எதிர்கால வாழ்வு என்பது அவர் தற்பொழுது செய்யும் செயல்களால் நிர்ணயமாகும் என்பது.

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி

என்னும் குறளால் வள்ளுவர் இதனை அழகாக எடுத்து விளக்குகின்றார். எதிர்கால வாழ்வு என் செயலால் உருவாகின்றது என்னும் பொழுது ஏற்படும் முயற்சி வாழ்வுக்கு உறுதியை தரும். ஆனால் பழவினை என்று ஏங்கியிருக்கையில் துன்பங்கள் பெருகும் என்னும் வள்ளுவத்தின் ஊழ் பற்றிய விளக்கம் ஊழை நாம் அணுக வேண்டிய முறையை விளக்குகின்றது. வேறுவிதமாக கூறுவதனால் ஊழின் ஒரு பகுதி தான் இறந்தகால செயலுக்குரிய பயனை விளைப்பதன் மூலம் மனிதனைக் கட்டுப்படுத்துகின்றது. இரண்டாவது பகுதி அக்கட்டிலிருந்து விடுபட மனிதன் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. இதனையே

தேறு நீ இனிச் செய் கன்மம் மேலுடல் சேரும் என்றே

என்னும் அருள் நந்தி சிவச்சாரியரின் சிவஞான சித்தியார் செய்யுளும் இதனையே வலியுறுத்துகின்றது.

## இறைவனுக்கும் கருமக் கோட்பாட்டிற்கும் உள்ள தொடர்பு

ஒருவர் செய்த வினைகளின் கூட்டு மொத்தம் சஞ்சிதம் எனப்படுகிறது. இந்த வினைக்கு இறைவன் எவ்விதத்திலும் பொறுப்பாளியல்ல. ஆயினும் இறைவனின் கருணையால் அவ்வினையின் ஒரு பகுதியை மட்டும் அனுபவிக்கும் நிலையில் ஒருவர் உடைய வாழ்க்கை வட்டம் ஆரம்பமாகும் பொழுது அவ்வாழ்க்கை வட்டத்தில் அனுபவிக்க வேண்டிய வினை பிராரப்தம் எனப்படும். இந்தப் புதிய பிறவியில் செய்யப்படும் வினைகள் ஆகாமியம் எனப்படும்.

இறைவனுடைய கருணை வெள்ளமாகிய திருவருளை உணரும் பொழுது உணர்த்துவதால் உணரும் தன்மையுள்ளதாகிய ஆன்மா தன் பிறவிகட்டுக்களில் இருந்து விடுபடுகிறது. உந்திகளின் சக்தியினால் ஒரு பொருள் புவியீர்ப்பு சூழலுக்கு அப்பால் சென்றதும் அந்த ஈர்ப்பில் இருந்து அப்பொருள் விடுபடுவது போல இறைவனின் அன்பு வட்டத்துள் ஈர்ப்புண்டு பிறவி வினைகளுக்கு அப்பால் செல்ல செல்ல ஊழ் வலியின் கட்டுக்கள் செயலற்றனவாகும். இந்த சுதந்திரம் அதாவது வினைவலிக்குள் மேலும் மேலும் சிக்குண்ணுவதும் விடுபடுவதும் ஒவ்வொரு

ஆன்மாவினுக்கும் உண்டு. அதனை உணர்த்தி இறைவனிடம் ஆன்மாவை நெறிப்படுத்தும் துறை தான் ஆன்மீகம்.

இருள் சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

என வள்ளுவர் இதனை விளக்குகின்றார்.

## அமைதி என்பதன் பொருள்

இவ்வாறு இறைவன் ஆன்மாக்களை விடுவிக்கும் செயற்பாடு அவனின் பேரன்பின் செயற்பாடு. நன்மைத்தனத்தின் சிவத்தின் வெளிப்பாடு. இதனைத்தான் திருமூலர்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலர்
அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

எனத் திருமந்திரத்தில் எளிமையான முறையில் விளக்குகின்றார். அன்பே சிவம் என்ற உணர்வு வலுப்பெற வலுப்பெற அமைதி தோன்றும். இந்த அமைதி தனிமனித அமைதி சமூக அமைதி என்ற இரு நிலைகளிலும் வலுப்பெறும் பொழுது அமைதி தவழும் பூமியாக அப்பூமி காட்சியளிக்கும். அன்பே சிவமாய் நாம் அமர்ந்திருக்கும் பொழுது அங்கே நான் என்ற ஆணவ முனைப்பாட்டிற்கு இடமில்லை. அந்த நான் என்ற ஆணவ முனைப்பாட்டின் செயல்களான அமைதி யினங்களை அன்பே சிவமாய் அமர்ந்தார் தோற்றுவிக்க மாட்டார்கள்.

## விளக்கமின்மையால் விளைந்த பழி

சாதாரண மனிதன் பிரம்மச்சாரியம் கிருகஸ்தம் வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்னும் நான்கு நிலைகளினூடாக தனிமனித அமைதியைப் பெறுகின்றான் என்ற சைவம் சமுதாய அமைதி பிராமணி சத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நான்கு தொழில் பிரிவுகளால் உருவான வர்ணங்களின் கூட்டு செயற்பாட்டால் எய்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. இது தொழில் பகுப்புக்களின் தனித்துவங்களையும் அவை சமுதாய அமைப்பில் ஒரு ஒழுங்கின் கீழ் இயங்கி சமூக பொருளாதார வளர்ச்சிகளை ஏற்படுத்த வேண்டிய தேவைகளையும் குறித்து பிறந்த ஒன்று. ஆனால் இந்த சமுதாயத்து நான்கு நிலைகளும் பிறப்பால் ஏற்படுவது என்ற பழியை தமிழர்கள் ஏற்றதில்லை.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்

என்றும்

மேலிருந்தும் மேலல்லால் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர்

என்றும் கூறும் திருக்குறள்களும்

ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகின்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே

என்னும் அப்பரின் திருத்தாண்டகப் பாடலும் பிறப்பினால் வருண ஆச்சிர தருமத்தை நோக்குவதில் உள்ள பெரும் தவறை அநீதியை எடுத்து விளக்குகின்றது. எல்லோரும் பின்பற்றி ஒழுகுவதற்குத் தன் ஒழுக்கச் சிறப்பினால் வழிகாட்டியாகத் திகழ்பவரே ஆச்சாரியர் என்ற உன்னதநிலை என்ற உண்மை நிலை மீண்டும் உணரப்பட்டு — பிறப்பு குருவாகத் திகழ்வதற்கு நிபந்தனையாக உள்ள நிலை மாறி — வேதங்களை ஒழுக்காக கற்று ஒழுகக் கூடிய பக்தி சிலர்களை பயிற்றுவித்து குருக்களாக சைவ சமயம் வெளிப்படுத்துகின்ற ஒரு பொற்காலம் புத்தாயிரம் ஆண்டில் தோற்றம் பெற்று — நாமார்க்குந் குடியல்லோம் நமனையஞ்சோம் என்று உரைத்த மேன்மை கொள் சைவ நீதி யாரையும் பிறப்பால் அடிமையாக்கும் கொடுமையை இனியும் அனுமதியாது என்பதை உலகிற்கு நிரூபிக்கட்டும்.

## திரு மந்திரம் புத்தாயிரத்தின் வேதமாகட்டும்

திருமந்திரம் மனித குலத்தை ஒரே குடும்பமாகவும் ஒரே இறைவனுக்கு ஆட்பட்டவர்களாகவும் காட்டுகின்ற அற்புத வரிகள். ஆம் மனிதர்கள் இந்த உண்மையை உணர்ந்தால் யுத்தம் சண்டை வறுமை போன்ற இயமதூதர்களுக்கு இவ்வுலகில் இடமில்லை — நமனுக்கு வேலையில்லை. இதுதான் மேன்மை கொள் சைவ நீதியின் அடிப்படை. இந்த மேன்மை கொள் சைவ நீதி உலகின் வேதமாக புத்தாயிரத்தில் மாறச் செய்வோம்.

சிவஞான சித்தியார் பக்கம் 115 வது பாடல் வரியான யாதொரு தெய்வங் கண்டீரத் தெய்வமாகி என்பது எல்லா இறைவடிவங்களிலும் இருப்பவன் ஒரே இறைவனே என்பதை தெளிவுபடுத்துகின்றது. ஆதலால் உண்மையான சைவன் ஒருவனுக்கு சாதி மத பேதங்கள் இருக்க முடியாது. ஆனால் தன்மானம் சைவத்தின அடிநாதம். நாமார்க்கும் குடியல்லோம். ஆகவே எந்தச் சைவன் மேலும் எந்த வகையான அடிமைத்தனம் திணிக்கப்பட்டாலும் அவன் அதை எதிர்த்துப் போராடி விடுதலை வாழ்வை உருவாக்குவதும் அவனின் ஆன்மீக கடமையாக உள்ளது. இதை உணர்ந்து நாம் யார்க்கும் அடிமைகளும் இல்லை நாம் யாரையும் அடிமைப்படுத்தவும் மாட்டோம் என்பதை தமிழீழ விடுதலை மூலம் உலகிற்கு காட்டி மேன்மை கொள் யினை புத்தாயிரத்தில் நிலை நாட்டுவோம்.

# ஸ்ரீ ரமண மஹர்ஷி

பாரத நாட்டின் புண்ணிய தினங்களில் ஆருத்ரா தரிசனம் விசேஷம் வாய்ந்தது. கௌதமர், பதஞ்சலி போன்ற பக்த சிரேஷ்டர்களுக்கு சிவபெருமான் காட்சியளித்த இப்புனித நாளன்று, 1879ம் வருஷம் டிசம்பர் மாதம் இருப்தொன்பதாம் தேதி இரவு ஒரு மணிக்கு ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் அவதரித்தார்.

அவர் பிறந்த ஊர் திருச்சுழி. மதுரை ஜில்லாவில் ஓர் கிராமம். அவரது தந்தை ஸ்ரீ சுந்தரம் ஐயர் கண்ணியமான வக்கீல் தொழில் நடாத்தி வந்தார். அவருக்கு மூன்று புதல்வர்கள். இரண்டாவது குழந்தையாகிய ரமணருக்கு வேங்கட ராமன் என்று நாமகரணம் செய்தனர். அக்ஷராப்யாசனமானதும் குழந்தை வேங்கடராமனை உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். பின்னர், திண்டுக்கல் சென்று ஒரு வருஷம் ஐந்தாவது வகுப்பில் படித்தார். இதற்குப்பின் மதுரைக்குப் போய் ஸ்கூலிலும், மிஷன் ஹைஸ்கூலிலும் வாசித்தார்.

பள்ளிப்பிராயத்திலெல்லாம், வருங்காலத்து மகிமையைக் குறிக்கும் அறிகுறிகள் எதுவும் அச்சிறுவரிடம் காணப்படவில்லை. மகா புத்திசாலியென்று பேரும் எடுக்கவில்லை. நல்ல வலுவான உடலுறுதி உண்டு. இதைத் தவிர மற்றச் சிறுவர்களைவிட எவ்விதத்திலும் அவர் சிறந்து விளங்கவில்லை.

## குறிப்பிடத்தக்க சம்பவம்

பதினாறு வயது வரை இப்படிப் படிப்பில் கழிந்தது. 1895ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில் அவரது வாழ்வில் ஓர் முக்கிய சம்பவம் நிகழ்ந்தது.

ஊரிலிருந்து உறவினர் ஒருவர் வந்திருந்தார். "எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று வேங்கடராமன் க்ஷேமம் விசாரித்தார். "அருணாசலத்திலிருந்து வருகிறேன்" எனறு வந்தது பதில். அது அவரைப் பரவசப்படுத்தியது. சிறு வயது முதல் உள்ளத்தில் தானே ஒலித்துக் கொண்டிருந்த 'அருணாசலம்' என்னும் ஏதோ ஒன்று, பூமியிலேயுள்ள ஓர்தலம், மலை என்னும் உயிரைக் கேட்டு அவர் ஆச்சரியமுற்றார். ஆனால் அவர் அதைப் பற்றி அதிகம் ஒன்றும் நினைக்கவில்லை. இதன் பிறகு ஒரு நாள் 'பெரிய புராணம்' என்னும் நூல் ஒன்று கிடைத்தது. அதிலடங்கிய நாயன்மார்களுடைய திவ்விய சரித்திரங்கள் அவரது உள்ளத்தைக் கவர்ந்தன. ஆயினும் இந்த அனுபவங்கள் கூட அவர் மனத்தில் ஆழப் பதியவில்லை. கடைசியாக 1896ஆம் ஆண்டில் தான் திடீரென ஒரு மாறுதல் ஏற்பட்டது.

## ஆத்ம சாக்ஷாத்காரம்

ஒருநாள் வேங்கடராமன் தனது சிறிய தந்தை வீட்டு மாடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். உடலிலே நோய் ஒன்றும் இல்லை. ஆனால் திடீரென்று ஏதோ ஒரு வித பயம் உள்ளத்தில் எழுந்தது தான் மரணத் தறுவாயில் இருப்பதாகச் சிறுவருக்குத் தோன்றியது. ஆனால் பெரியவர்கள் ஒருவரிடமும் இதை அவர் சொல்லவில்லை. தானே இதைத் தீர்த்துக்கொள்ளத் துணிந்தார்.

பிற்காலத்தில் இதை விவரிக்கும்போது ஸ்ரீ மஹர்ஷிகளே பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

"திடீரென்று ஏற்பட்ட இச்சம்பவம் என்னைத் தீவிர யோசனையில் ஆழ்த்தியது. சரி, சாவு நெருங்கிவிட்டது. சாவு என்றால் என்ன? எது சாகிறது? இந்த உடல் தானே செத்துப்போகிறது? என்று எனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டு உடனே மரணானுபவத்தை ஏகாக்கிரமாய் பாவித்துப் பார்த்தேன்.

"பிணம்போல் விறைக்குமாறு கை கால்களை நீட்டிப் படுத்தேன். 'சரி, இந்த உடம்பு செத்துவிட்டது' என்று உள்ளுக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன். இதை மயானத்திற்குக் கொண்டுபோய் எரித்து விடுவார்கள். இது சாம்பராய்ப் போகும். ஆனால் இந்த உடம்பின் முடிவுடன் 'நானும்' இறந்து விட்டேனா? இந்த உடல் தான் நானா? இந்த உடல் சப்தமற்று, சலனமற்றுக் கிடக்கிறது. ஆனால் இந்த உடலுக்கும், அப்பாற்கூட 'நான்' என்ற சொரூபத்தின் சக்தியும், தொனியும் ஒலிக்கிறதே! ஆகவே, 'நான்' தான் ஆத்மா உடலுக்குள் கட்டுப்படாத ஒரு வஸ்து என்ற முடிவுக்கு வந்தேன். இதெல்லாம் வெறும் மனத்தோற்ற மல்ல. நிதர்சனமாக உண்மை அனுபவ மென்று தெளிவாய் விளங்கியது.

## ஆத்மானுஸந்தானம்

இந்த அனுபவம் அரை மணிக்குள் நடந்தேறிவிட்டது. மரண பயம் பறந்து போய் விட்டது. அவரது மனம் ஆத்மத்யானத்திலும் ஆழ்ந்தது. படிப்பைச் சிறிதும் நாடவில்லை. வீட்டில் உள்ளவர்களை நினைக்கவில்லை. விளையாடலும், சண்டையும் மறைந்தன. எதிலும் பற்றில்லை. சாந்தமும், வணக்கமும், நிறைந்தவரானார். உணவைப் பற்றிச் சிறிதும் கவலையில்லை. நல்லதோ, கெட்டதோ, கிடைத்ததை ருசி, மணம் ஒன்றையும் கவனியாமல் சாப்பிடலானார்.

கோவிலுக்குப் போவதிலே புதிய சிரத்தை ஏற்பட்டது. இதற்கு முன்பெல்லாம் எப்போதாவது, ஸ்ரீ மீனாக்ஷியம்மன் சினேகிதர்களுடன் போய்விட்டு வருவது வழக்கம். ஆனால் இப்போது அப்படியில்லை. நாள் தவறாது, தனியே கோவிலை

யடைந்து அம்மன், சுவாமி, ஸ்ரீ நடராஜர், அறுபத்து மூவர் சன்னிதிகளில் நீண்ட நேரம் தொழுது விட்டு வருவார்.

"அறுபத்தி மூவரது அன்பைப் போன்று எனது பக்தியைப் பெருக்கி நிலைக்கச் செய்ய அருள் சுரக்குமாறு ஒவ்வோர் சமயம் இறைவனை இறைஞ்சுவேன். ஆனால் அனேகமாக எதையும் அபேக்ஷித்துப் பிரார்த்திப்பதில்லை. அகக்கடல் பொங்கி அருட்கடலோடு கலக்கும் இந்த ஹிருதய சங்கமத்தினால், கண்களிர் நீர் துளிக்கும். அவ்வளவுதான். இன்ப துன்ப உணர்ச்சி ஒன்றும் கிடையாது."

என்று சுவாமி சன்னிதியில் தான் அடைந்த நிலையை விளக்கியிருக்கிறார்.

## அப்பன் அழைப்பு

இவ்வாறு ஆறு வாரங்கள் கடந்தன. வேங்கடராமனின் மாறுதலைக் கண்ட உறவினர்களுக்கு அது பிடிக்காமலிந்தது. ஆச்சரியமல்ல. படிப்பிலும் கவனம் செலுத்துவதில்லையென்று தெரிந்ததும் வெறுப்பும் கோபமும் கொண்டனர். ஆகஸ்டு 29ம் திகதியன்று விஷயம் முற்றிவிட்டது.

அன்று வேங்கடராமன் நோட்டுப் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு ஒரு பாடம் எழுதிக் கொண்டிருந்தார். ஆங்கில இலக்கணப் புஸ்தகத்தில் உள்ள ஒரு அத்தியாயத்தை மூன்று தரம் திருப்பித் திருப்பி எழுதிக் கொண்டு வரவேண்டுமென்பது ஆசிரியரின் கட்டளை. மூன்றாவது முறையாகப் பாடத்தை எழுதும்போது திடீரென்று வெறுப்பு உணர்ச்சி தோன்றிவிட்டது. புத்தகத்தைக் கட்டி மூலையில் போட்டுவிட்டு. கண்ணை மூடித் தியானத்தில் அமர்ந்தார்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த அண்ணா நாகசாமி, தம்பியைப் பார்த்து, 'இப்படிப்பட்டவனுக்கு இதெல்லாம் என்னத்துக்கு' என்று வெறுப்புடன் இரைந்து கேட்டார்.

சில நாட்களாகவே இம்மாதிரியான கேள்விகள் வேங்கடராமனுக்கு சகஜமாகி விட்டன. இவைகளை யெல்லாம் அவர் பொருட்படுத்துவதே இல்லை. ஆனால் அன்று மட்டும், அக்கேள்வி சுருக்கென்று தைத்தது.

'ஆமாம், வாஸ்தவம்தானே! எனக்கு இங்கு என்ன வேலை?' என்ற சிந்தனை எழுந்தது.

அதே சமயத்தில், சில மாதங்களுக்கு முன்பே அக்கேள்விப்பட்ட அருணாசல திவ்ய க்ஷேத்திரத்தின் நினைவு வந்தது.

உடனே இருந்த இடத்தை விட்டு எழுந்து பள்ளிக் கூடத்தில் இன்று ஸ்பெஷல் கிளாஸ், போய்விட்டு வருகிறேன்" என்று அண்ணனிடம் சொன்னார்.

"அப்படியானால், கீழே போய், பெட்டியைத் திறந்து ஐந்து ரூபாய் எடுத்துக்கொண்டு போய் என் காலேஜ் சம்பளத்தையும் கட்டிவிட்டு வா" என்று கூறினார் நாகசாமி.

"இதுவும் தெய்வ கடாக்ஷம் தான்" என்று நினைத்துக் கொண்டு, வேங்கடராமன் அவ்வாறே ரூபாயை எடுத்துக்கொண்டார். பின்னர், அட்லாஸ்" ஒன்றை எடுத்து ரயில் மார்க்கத்தைக் குறிப்பாகப் பார்க்கவே மூன்று ரூபாய் போதும் என்று தோன்றியது. உடனே, ஒரு கடிதம் எழுதி பாக்கி ரூபாய் இரண்டையும் அத்துடன் சேர்த்து, நன்றாகத் தெரியும்படியான ஓர் இடத்தில் வைத்துவிட்டு ஸ்டெஷனுக்குப் புறப்பட்டார்.

## கடித்தில் கண்டிருந்ததாவது.

"நான் என் தகப்பனாரைத் தேடிக் கொண்டு அவருடைய உத்தரவின்படி இவ்விடத்தை விட்டு கிளம்பிவிட்டேன். இது நல்ல காரியத்தில்தான் பிரவேசித்திருக்கிறது. ஆகாயைல் இந்தக் காரியத்திற்கு ஒருவரும் விசனப்பட வேண்டாம். இதைப் பார்ப்பதற்காகப் பணமும் செலவு செய்ய வேண்டாம். உன் சம்பளத்தை இன்னும் செலுத்தவில்லை. ரூ.2 இத்தோடு கூட இருக்கிறது.

இப்படிக்கு........"

கடிதத்தின் வார்த்தைகளில் அவரது மனநிலை ஸ்பஷ்டமாகப் பிரதிபலிப்பதைக் காணலாம். "நான்" என்ற ஆரம்பம் சில வரிகளுக்கப்பால் ஏதோ ஓர் "இது"வாக மாறி, கடைசியில் கையெழுத்துப் போடுவதற்குப் கூட ஒருவரும் இல்லாமல் மறைந்துவிட. கடிதம் கையெழுத்தில்லாமலே முடிவடைகிறது.

ரயில்வே ஸ்டேஷனை அடைந்தபோது நேரமாகி விட்டது. ஆனால், அதிருஷ்டவசமாக அன்று ரயிலும் தாமதமாகவே வந்து சேர்ந்தது. திருவண்ணாமலைக்குச் செல்ல திண்டிவனம்தான் சமீப ஸ்டேஷன் என்று நினைத்துக் கொண்டு அந்த ஊருக்கு ஒரு டிக்கட் வாங்கினார்.

,புதிதாகப் போட்டிருந்த விழுப்புரம் காட்பாடி ரயில்பாதை மூலம் திருவண்ணா மலைக்கே போகலாமென்பது அவருக்குத் தெரியாது. வண்டியேறியபின் ஒரு வயதான மௌல்வி சொல்லித்தான் இந்த விஷயம் தெரிந்தது.

விழுப்புரத்திற்கு ரயில்வரும்போது இரவு 3 மணி. பொழுது விடிந்ததும் திருவண்ணா மலைக்கு வழி விசாரிப்பதற்காக ஸ்டேஷனிலிருந்து ஊருக்குள் சென்றார். பசியெடுக்கவே, ஒரு ஹோட்டலில் நுழைந்தார். சாப்பாடு தயாராகக் கொஞ்சம் நாழிகை காத்திருக்க வேண்டியிருந்தது. அச்சமயத்தை தியானத்தில் கழித்தார்.

சாப்படானதும், இரண்டணாவை எடுத்து ஹோட்டல்காரரிடம் கொடுத்தபோது, பையனிடம் மொத்தம் இருப்பதெல்லாம் பத்துக் காலணாதான் என்று தெரிந்ததும், அவர் அதை ஏற்குக் கொள்ளவில்லை.

மிகுதி அடுத்த இதழில்

# "சமய வளர்ச்சிக்கு சமூகம் செய்யும் சாத்தியங்கள்"

தர்மம், சத்தியம் நமக்கு இருக்குமானால் சமயத்தில், பல சாத்தியங்கள் உண்டாக்கலாம், உருவாக்கலாம். சாதனை புரியலாம்.

ஒரு துறையில் மட்டுமல்ல, பல துறைகளில் நாம் நமது ஒற்றுமையைக் கட்டிக் காக்கலாம்.

கல்வி, கலாச்சாரம், பாரம்பரிய சம்பிர தாயங்களையும் போற்றிப் பேணலாம். இதனால் எண்ணியவைகளைக் கனவாகாமல் முடிக்கலாம். இதனால் திண்ணியவராகப் பெறலாம்.



இறைவன் மீது நம்பிக்கை வைத்தல் என்பது நாட்டின் அறக்கோட்பாடுகளில் தலையாயனது.

"சமூகம்" சிறுபான்மையினர் எனினும் அவரவர் சமய வழிபாட்டுக்குச் சுதந்திரம் உண்டு. மரபுடன் சமரச சன்மார்க்கம் கண்ட பரம்பரை நம் இந்திய சமூகம். "சநாதன தர்மம்" என்ற சிறப்பும் இந்து சமயத்திற்கு உண்டு.

சிறப்புக்குரிய சிறிய சமூகத்திற்கு உள்ள சமயச் சிறப்புக்கு இந்துக்கள் ஆற்றும் ஆற்றக் கூடிய சாத்தியம் என்ன? இளைஞர்களை எப்படி இணைக்கலாம். அவர்களை சமயத்தின் பால் ஆர்வம் கொள்ள வைப்பது எப்படி? இதனை காலத்தை யொட்டிச் சிந்திக்க வேண்டும்.

காலமெல்லாம் என்ற கேள்விக் குறியில் நில்லாது அல்லது இல்லாது சமயம் காத்து, நம்மையும் காத்து, நடப்பில் காலத்தையும் கணித்து வாழத் தெரியக் கூடிய நடைமுறைச் சாத்தியங்களைச் சமயத்தின் வளர்ச்சி வழியில் காண வேண்டும் என்பதே நமது அவா!

பேதங்களை அகற்றி, இந்து சமய வழியில் யாவரும் ஒன்றிணையாலாம். இணைய வைக்க மார்க்கம் உண்டு. அதற்கு மனம் வேண்டும். மனம், சமய மணம் பரப்ப, விரிய வேண்டும். விரிவில், விரிசல் ஏற்படாது மேல்—கீழ் பார்க்காது, ஊனக் கண்ணை நீக்க வேண்டும். ஞானக் கண்ணைத் திறக்கச் சமய ஞானம் ஒளி பெற வேண்டும். இதற்கு அடிப்படைச் சமய ஞானம் என்ன என்பதை இளமையிலிருந்தே ஊட்ட வேண்டும்.

நம் சமயத்தில் நடிப்பு, நடப்பாகலாகாது. ஆலயங்கள், மன்றங்கள் யாவும் ஒன்று கூடி, ஒரு குடையின் கீழ் நின்று செயல்களை தீட்டிச் செம்மையாகச் செய்ய வேண்டும். சக்திகளைக் கணித்து அறிந்து, நம்மை நாமே மறு விமர்சனம் செய்து, எதிர்காலத்தில் வலிவு தரும் செயல்பாடுகளை ஆராய வேண்டும்.

படித்தவர்களும், பாமரர்களும், மாணவர்களும் இளையவர்களும் சமய உணர்வில் ஒன்றிக்கும் சாத்தியக் கூறுகளையும் அறிய வேண்டும். நம் காலத்துடன் சமயம் போய்விடாது. இளைய சந்ததிகளுக்கும் அதனைச் சிறப்புச் சொத்தாக விட்டு வைக்க வேண்டும். பயனுடைய சிறு அளவு செயல் ஆனாலும் எதிர்காலத்தில் அது விருச்சமாக விரியும். நாம் எதைச் செய்தல் சாலும் என்பதை ஓர்தல் அவசியமாகிறது. பயனுடைய சொல்லைச் சொல்லுக. செயலின் சிறு அளவிலேனும் கொள்ளுக என்பதை வேகமாக பெறலும் வேண்டும்.

இங்குள்ள இந்து சமயத்தின் செயற்றிறங்களை ஒன்று படுத்த, அதன் அடிப்படைகளைச் சரியான தளத்துடன் பேணப்பட வேண்டும்.

சமயம் நம் வாழ்க்கைக்கு அடிப்படை

மனப்பக்குவத்தை அதற்கு மேல் வைக்க வேண்டும். குழம்பிய மனப்பான்மையில் சமயத்தை அணுகலாது. நம் சிறார்களுக்கு சமயத்தின் மேன்மை, உயர்வு, விஞ்ஞானத்தோடு இயைந்த சிறப்பு தன்மை, அடிப்படை இயல்பு தன்மை போதாதது. அல்லது அறிவே இல்லை என்றும் கூறலாம். வீண் சர்ச்சைகளால் பயனில்லை. சமய ஞானம் உள்ளவர்கள் நம் சமூகத்திற்கு இதில் வழிகாட்ட வேண்டும்.

ஒரு இந்துவின் சமய வாழ்க்கைக்கு ஆலயம் அடிப்படை வீட்டிலும் வணங்கலாம். ஆனால், ஆலயம் சென்று ஆகம முறைப்படி வணங்குவதென்பது எதனால் என்பதை உணர்ந்து காரியமாற்று செய்ய வேண்டும்.

பிற சமயங்கள், தாங்கள் வழிப்படும் ஆலயம் அல்லது தேவாலாயம், பள்ளிவாசல் பௌத்த விகாரங்களின் வழி, தங்களைச் செம்மைப்படுத்திக் கொள்வுதைக் காணலாம். அந்த சாத்தியம் நமக்கு உண்டு. ஆனால் நாம் அதனை செம்மையாக செயல்படுவதில்லை. நமது சமயத்தின் சார்த்தை, பெருமையை, கீர்த்தியினை அறிந்து மற்றவர்களுக்கும் எடுத்து இயம்ப வேண்டும்.

சாதாரணமாக நான் எல்லா இடங்களிலும் , நாடுகளிலும் இதனைக் காண்கிறேன். ஒரு சாதாரண இந்து குழப்புகிறான்.

இமயத்திலிருந்து கொண்டு மடுவில் நிற்பவனைப் பார்த்து, என்னைப்போல் நீயும் உச்சிக்கு வா என்று வாயளவில் சொல்லாது, உச்சியிலிருப்பவர்கள் இறங்கி வந்து, தான் பெற்ற சமய இன்பத்தை அந்த பாமர இந்துக்கு காட்டி, உச்சிக்கு அழைத்துச் செல்லுதல் வேண்டும். அதுவே தர்மமாகும்.

ஞானச்சுடரை ஏற்றக்கூடிய மையத்தைக் காட்ட வேண்டும். இந்து சமயத் தத்துவத்தைப் படிப்படியாகப் படியும் வகையிலும், புரியும் வகையிலும் வகையும் தொகையும், நிலையும் நினைப்பையும் தெரிந்து, கொஞ்சம் கொஞ்சமாக ஞானத் தீபத்தினை ஏற்றப் பழக்க, பழக வேண்டும். சமயம் தெரிந்தவர்கள் — சன்றோர்கள்.

சிங்கப்பூர், மலேசியா, இலண்டன், தென் ஆப்பிரிக்கா (டர்பன்) ஆகிய நாடுகளில் சில ஆலயங்களிலும், மற்றும் சிலர் தனிப் பட்டவர்களும், நல்லவர்களும் வல்லவர்களும் ஆங்காங்கு ஆசிரியர்மார்களும் சிறார்களுக்கும் சமய போதனை செய்வதுடன் மறவாது தமிழினையும் கற்றுத் தருவதைக் காண்கிறேன். இந்த மனப்பக்குவத்தால் நாம் இன்றி இணையலாம்.

இந்த மாற்றத்தினால் நம்மிடம் பலம் உண்டு என்பதை அறியலாம்.

எல்லா நாட்டிலும் மாற்றங்கள் மிக விரைவாக நடைபெறுகிறது. இதனை உணர்ந்து நம் சமய வழிபாட்டிலும் ஆகமத்தின் அச்சாணிக்கு ஊறு ஏற்படா வண்ணம் ஒன்றிணைந்து செயல்படும் வழிமுறைகளை ஆராய வேண்டும்.

இந்த தர்ம வாழ்வு, அவர்களுடைய வழிபாட்டில் முடியக் கூடியதல்ல, ஆத்மாவுடன் அதை வளர்க்கக் கூடிய கல்விக்கும், அதனைச் சார்ந்த கலைக்கும் கலாச்சாரப் பண்பாட்டிற்கும், சிந்தனைக்கும் ஏன் பொருளாதாரச் சிந்தனைக்கும் வாழ வழி காட்டும் அகிம்சா சிந்தனைக்கும் கூட தேவையானதாகும். இதனை நம் இளையவர்கள் சிந்திக்க வேண்டும்.

இந்த வழிகளில் இந்து சமயத்தை அடி வேரிலிருந்து, நுனிக்கிளையிலுள்ள தளிர் வரைக்கும் இதன் சத்து பரவியிருக்கப் பார்த்துக் கொண்டால், சமயம் கால வோட்டத்தில் அசைக்க முடியாத ஆணிவேரைப் பசுமையுடன் ஊன்றி விடும் நம்பிக்கை உண்டு.

நாடெங்கிலும் சமய சொற்பொழிவுகளை நடத்தலாம். கருத்தரங்கு கூட்டலாம். சமய விழாக்களை நடத்தலாம். இன்னும் மனமிருந்தால் எவ்வளவோ செய்யலாம். சிறுபான்மையோராக இருக்கும் நமக்கு — நமக்களிக்கப்பட்டிருக்கும் சமய வழிபாட்டுக்குரிய உரிமையைப் பயன்படுத்திக் கொண்டால், பயன் படுத்திக் கொள்ளுவதில்தான் எல்லாச் சிறப்பும் உண்டு. அதற்கு அடிப்படை போடுங்கள். சமயத்தின் வளர்ச்சிக்கு சமூகம் செய்யக்கூடிய சாத்தியங்களை தொடங்குங்கள்.



"எல்லாரும் எங்க இப்படிக் கூட்டம் கூட்டமா படையெடுக்கிறுங்க ? "
"உங்க கோயிலில வெள்ளை வேட்டிக்காரர் அன்னதானம் குடுக்கினமாம். ஏதோ ஒரு நாள் சாப்பாட்டுக்காசு மிச்சம். நாளைக்கு தியேட்டரிலை படம் பார்க்கலாம்."

# அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் கோவில் (ரூற்றிங்)
# மாதாந்த விசேடங்கள்

### ஜனவரி 2000

2ம் திகதி ஞாயிறு சர்வ ஏகாதசி
3ம் திகதி திங்கள் பிரதோஷ விரதம்
6ம் திகதி வியாழன் அமாவாசை
10ம் திகதி திங்கள் சதுர்த்தி
15ம் திதகி சனி தைப்பொங்கல்
16ம் திகதி ஞாயிறு கார்த்திகை
18ம் திகதி செவ்வாய் பிதோஷம்
20ம் திகதி வியாழன் பௌர்ணமி
(பூரண சந்திர கிரகணம்)
21ம் திகதி வெள்ளி தைப்பூசம்
24ம் திகதி திங்கள் சங்கடஷர சதுர்த்தி
31ம் திகதி திங்கள் சர்வ ஏகாதசி

### பெப்ரவரி 2000

2ம் திகதி புதன் பிரதோஷ விரதம்
4ம் திகதி வெள்ளி சனி அமாவாசை
9ம் திகதி புதன் சதுர்த்தி
12ம் திகதி சனி கார்த்திகை விரதம்
17ம் திகதி வியாழன் பிரதோஷம்
18ம் திகதி வெள்ளி நடேசர் அபிஷேகம்
19ம் திகதி சனி பௌர்ணமி , மாசி மகம்
22ம் திகதி செவ்வாய் சங்கட ஷர சதுர்த்தி

### மார்ச் 2000

1ம் திகதி புத்ன சர்வ ஏகாதசி
3ம் திகதி வெள்ளி பிரதோஷம்
5ம் திகதி ஞாயிறு சர்வ அமாவாசை
9ம் திகதி வியாழன் சுக்ல சதுர்த்தி
11ம் திகதி சனி கார்த்திகை விரதம்
17ம் திகதி வெள்ளி பிரதோஷம்
19ம் திகதி ஞாயிறு பௌர்ணமி
20ம் திகதி திங்கள் பங்குனி உத்தரம் + 1ம் திகங்கள் பொங்கல்
23ம் திகதி வியாழன் சகடஹர சதுர்த்தி
27ம் திகதி திங்கள் பங்குனி பொங்கல்
31ம் திகதி வெள்ளி சர்வ ஏகாதசி

### ஏப்பர் மாதம் 2000 உற்சவ மாதம்

1ம் நாள் சனி முத்தமிழ் விழா
2ம் நாள் ஞாயிறு பிரதோஷ விரதம்
3ம் நாள் திங்கள் அமாவாசை விரதம் பங்குனி 3ம் திங்கள் பொங்கல்
ஸ்ரீ முத்துமாரி அம்மன் சித்திரை திருவிழா தொடக்க நிகழ்ச்சிகள்
4ம் நாள் செவ்வாய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கொடியேற்றம்
7ம் நாள் வெள்ளி சதுர்த்தி விரதம் கார்த்திகை விரதம்
10ம் நாள் திங்கள் பங்குனி நிறைவு திங்கள் பொங்கல்
13ம் நாள் வியாழன் புதிய தமிழ் விக்கிரம வருட பிறப்பு காலை 10,45
16ம் நாள் ஞாயிறு பிரதோஷ விரதம்
17ம் நாள் திங்கள் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேர்திருவிழா
18ம் நாள் செவ்வாய் சித்திரா பௌர்ணமி தீர்த்த திருவிழா
19ம் நாள் புதன் ஆலயமுருகன் திருவிழா
20ம் நாள் வியாழன் ஆலய சாகம்பரி அலங்கார திருவிழா
21ம் நாள் வெள்ளி அம்மன் திரு ஊஞ்சல் திருவிழா
22ம் நாள் சனி பூங்காவன திருவிழா
23ம் நாள் ஞாயிறு வைரவர் மடை
26ம் நாள் புதன் நடேசர் அபிடேகம்
29ம் நாள் சனி திருநாவுக்கரசர் குருபூசை
30ம் நாள் ஞாயிறு சர்வ ஏகாதசி.

## தாயக துயர் துடைப்பு பணியில் ஆலயம்
### ஆதரவு குறைந்தோர்க்கான உதவி நிதியம் ஆரம்பம்

ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம் பல்வேறு துயர் துடைப்பு பணிகளை ஈழத்தாயக தமிழ்ப் பிரதேசங்களில் ஆற்றி வருவது தெரிந்ததே. ஆலய வருவாயில் ஒரு பகுதி தாயக உதவித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டு மென்பது ஆலய ஆலய அமைப்பு விதிகளில் உள்ளடங்கிய ஒன்று. தற்போது இத்திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்குடன் தாயக ஆதரவு குறைந்தோருக்கான உதவி நிதியம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இன்நிதியம் கீழ்வரும் முறைகிளல் வருவாயை பெறும்.

1. ஆலயத்தின் வருமானத்தில் மாதாந்தம் முதலாம் நாளில் £ 1000 இன் நிதிய கணக்கில் வைப்பில் இடப்படும்.
2. ஆலய உபயகாரங்களும் பிறரும் பிரசாதங்களுக்காக வழங்கும் பணம் முழுமையாக இக்கணக்கில் சேர்ப்பிக்கப்படும்.
3. ஆரம்பகாலம் முதல் துயர்துடைப்பு பணிக்கென ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள உண்டியலில் சேரும் பணம் மாதாந்தம் இக்கணக்குக்கு உரியதாகும்.
4. பொதுமக்கள் மனம் விரும்பி வழங்கும் நிதியுதவிகள் இக்கணக்குக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

இவ் அமைப்பை நிர்வகிக்கும் சபையில் ஆலய அறக்காவல் சபையின் நால்வரும் பொது

சேவையில் ஈடுபாடு கொண்ட மேலும் மூவருமாக எழுவர் இடம் பொறுகின்றனர்.
திரு நா.சீவரத்தினம்
திரு.தா.சிங்கம்
திரு.நா.கருணாநிதி
திருமதி டாக்டர் க.நடேசலிங்கம்
திருமதி டாக்டர் ஞான சந்திரன்
திரு வ.இ.இராமநாதன்
திரு வை தயாளன் ஆகியோர் இவ் எழுவரும் ஆவார். உரிய முறையில் வழமைப்போல இச்சபையின் பணிகள் வரவு செலவு விபரங்கள் உரிய ஆவணங்களுடன் பகிரங்கமாக அறியத்தரப்படும் எனவும் உறுதிப்படுத்துகிறது.

இன்நிதியத்துக்கு நன்கொடை வழங்க விரும்புவோர் விபரங்களை 0181 7679881 என்ற ஆலய தொலைபேசி இலக்கத்தின் மூலமோ அல்லது மேற்குறித்த ஏழு நிதிய நிர்வாகிகளில் எவருடனுமோ தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

இவ்வமைப்பு தன் முதலாவது உதவித் திட்டமாக முல்லைத்தீவில் இயங்கும் செஞ்சோலை ஆதரவு குறைந்த சிறுவர்கள் பராபரிப்பு இல்லத்துக்கு இலங்கை பெறுமதியில் இரண்டரை இலட்சம் ரூபாய்களை அனுப்ப திட்டமிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## முத்தமிழ் விழா சித்திரை 2000

சிவயோக அறக்கட்டளை அமைப்பு ஆண்டுதோறம் சிவயோகக் கலையரங்கின் முன் எடுக்கும் முத்தமிழ் விழாவின் நான்காம் ஆண்டு விழா இவ்ஆண்டு 01.04.2000 சனிக்கிழமை மு.ப.10 முதல் இரவு 10.00 மணிவரை வழமையான சிறப்பு நிகழ்ச்சிகளுடன் இடம் பெற உள்ளது.

* கவி அரங்கம் * பட்டி மன்றம்
* சிறப்பு சொற்பொழிவுகள்
* முதற்பரிசு பொற்ற போட்டியாளர் நிகழ்ச்சிகள்
* பரிசளிப்பு வைபவம்
* வில்லிசை * நடனம் * நாடகம்

என்பன இடம்பெறும்

விழாவை ஒட்டி பரந்த அளவிலான பல்வேறு இயல் இசை போட்டிகளும் கீழ்ப்பிரிவு மத்திய பிரிவு மேற்பிரிவாக நடாத்தப்பட உள்ளன. முதற் பரிசில் தங்கப்பதக்கமாக அமையும்.


**இலண்டன் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில்**
**சிவயோகம் திருமணமண்டபம்**

**இரு வருடங்களில் 200 திருமணங்களைக் கண்ட ராசியான திருமண மண்டபம்.**

**500 இருக்கைகள் அழகிய மணவறைகள் அலங்கார ஜோடனைகள் இசைக் கருவிகள் உணவு வசதிகள்**


சகலதும் சிறந்த முறையில் அமைந்துள்ள இலண்டனில் உள்ள ஒரே ஒரு திருமண மண்டபம்

தொடர்புகட்கு: நிர்வாகி

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் சிவயோகம்

**தொலைபேசி: 0181 767 9881**

**தொலைநகல்: 0181 767 9881**



# தியாக தீபம்

தெல்லிநகர் துர்க்கையம்பாள் சந்நிதியை
தெரியாத மக்களில்லை உலகமெங்கும்
பல்கியுள்ள சைவர்களில் அம்பாள் பார்வை
பட்டதனால் உயர்ந்தோர்கள் பலலட்சம்பேர்
நல்கிடுவாள் மாங்கலியப் பிச்சை என்று
நாடிடுவார் செவ்வாயில் நங்கையோர்கள்
எல்லோரும் அம்மன் அருள் நாடச் செய்த
எந்தகையாள் தங்கம்மா அம்மைதானே!

அறுபதுகளிலே ஓர் கொட்ட கைக்குள்
அண்டி நின்ற பாழ் சுவரில் அரசம் கொப்பும்
பெருகி நின்ற நிலை நீக்கி படையைக் கூட்டி
பேச்சாலே அம்மன் அருள் வலிமை காட்டி
குறுகியதோர் காலத்துள் கோயில் ஓங்கும்
குறிக்கோளே கொண்டுழைத்த இளநல் மங்கை
வரமருளும் அவளுக்கும் பக்தர் கட்டும்
வாழ்வை முற்றாய் தந்துழைத்து நிற்கும் நீரே!

துர்க்கையம்மன் என்றாலே மனதில் யார்க்கும்
தோன்றுவது அம்மனுடன் நீவீர் அம்மா
துர்ச்செயலர் கொள்ளை கொண்ட அம்மன் சொத்து
தோன்ற வைத்த தவ வலிமை நுமதே அம்மா
கர்த்தர் நபி புத்தர் எனும் மார்க்கத்தாரும்
கையெடுத்து கண்டவுடன் வணங்கும் தன்மை
இத்தரையில் கொண்ட சைவ பெருமாட்டி நீர்
எனும் பெருமை சைவர்நாம் பெற வைத்தீர் நீர்!

பேச்சாற்றல் பட்டங்கள் பெருமை சேவை
பிள்ளைகட்கு இல்லமென்று அமைத்த சீர்மை
ஆச்சரியம் ஆயிரமாய் குவியும் பக்தர்
அனைவருக்கும் தனிமடங்கள் அகதிச்சேவை
தீர்த்தக் குளம் கோபுரம் பின் தோட்டம் கோட்டம்
திகழ்வளைவு நும்உழைப்பு சிவயோகம் நாம்
பூச்சொரிந்து வாழ்த்தினம் நீர் நூறும் கண்டு
பொலியும் உடல் வளத்தோடு தொடர்வீர் தொண்டு

முத்துமாரி அம்பாளின் அடியார் சார்பில்
முகம் பார்த்து லண்டன் உள்ளோர் மகிழும் வண்ணம்
வைத்தனம் நும்படம், கோயில் கலண்டர் தோறும்
வையத்தில் சைவத்தை உய்வித்தற்காய்
இத்தரையில் உதித்த நும்மை புகழ் "டாக்ரர்"
என்றெந்த பட்டமும் ஈடு ஆமோ
வித்தகியே வயோதிபர்க்கும் இல்லம் கண்டாய்
வேண்டுகிறோம் "தியாக தீபம்" ஒளிர்க வாழ்க!

ப.வை. ஜெயபாலன்

# பவளவிழாக்காணும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பா



ஔவையார், காரைக்கால் அம்மையார், திலகவதியார் போன்றோரின் வரலாற்றை படித்து அறிந்திருக்கின்றோம். சிலசமயம் அவை மிகைப்படுத்தி மரபுவழியாக வந்ததோ என்ற ஐயமும் ஏற்படும். ஆனால் அம்மையார் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்க்கைமுறையை நாம் கண்கூடாக அறியும்போதுதான் ஔவையார் போன்றோரின் வாழ்க்கைவரலாறு மிகைப்படுத்தப்படவில்லை என்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. அம்மையார் எமது சகாப்தத்தில் வாழ்வது நாம்செய்த பாக்கியமே. சமய வழிபாடு என்பது கோவிலுக்கு சென்று கிரியைகளில் ஈடுபடுவது மாத்திரமின்றி சமுதாயத்திற்கு சேவை செய்வதும்தான் முக்கியம் என்பதை கடந்த அரை நூற்றாண்டாக அம்மையார் செய்கையின் மூலம் உதாரணம் காட்டியுள்ளார். அம்மையாரின் 75ம் ஆண்டு பிறந்ததினவிழாவுக்கு நாம் எமது உள்ளார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அம்மையார் மேலும் பல்லாண்டு வாழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் சமுதாயத்திற்கும் சேவை செய்யவேண்டுமென்று எல்லாம் வல்ல ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் பாதாரவிந்தத்தை வேண்டிநிற்கின்றோம்.

# குருவின் பெருமை



இரண்டாயிரம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் நாம் இனப் பிரச்சினை காரணமாக புலம் பெயர்ந்து வாழ்கின்றோம். இந்த நிலையிலே எம்மொழி மதப்பற்றுக் கொண்ட உயர்திரு ராஜமனோகரன் அவர்கள் சைவ சிறார்களாகிய எங்களுக்கு இவ் விரண்டையும் கற்பித்து வருவது போற்றுதற் குரியதாகும்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே!"

என்பதை ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் தமிழ் அறிதல், சைவம் உணர்தல், வழிபாட்டு முறை தெரிதல், ஒழுக்கம் பேணல், திருமுறை ஓதல், வழிபாடு இயற்றல் என எல்லாவற்றையும் உயர்திரு ராஜமனோகரன் அவர்கள் எங்களுக்கு கற்பித்து வருகிறார்.

அது மட்டுமன்றி தேவார திருவாசகங்களுக்கு பதவுரை கூறி விளக்கப்படுத்தி கற்பிக்கிறார். இந்த லண்டன் மாநகரிலே சைவ சமயச் சிறுவர்களாகிய எங்களுக்கு எத்தனையோ மைல்களுக்கப்பால் இருந்து சிரமம் பாராது வந்து சைவ சமயத்தைப் போதிக்கிறார் என்றால், அது அவர் செய்யும் இந்தத் தொண்டு மகத்தானது.

விஞ்ஞானங்களுடன் மெய்ஞ்ஞானமும் வளர்ந்தாலன்றி மனிதன் பூரண வளர்ச்சி பெறமுடியாது. அப்படிப்பட்ட மெஞ்ஞானத்தை எங்களுக்கு உணர்த்தி வருகிறார். அன்று யாழ்நகரில் நல்லை நகர் ஆறுமுகநாவலர் சைவத்திற்கும் தமிழிற்கும் செய்த பெருந்தொண்டை இன்று இந்த லண்டன் மாநகரிலே உயர்திரு ராஜமனோகரன் அவர்கள் செய்து வருகிறார்.

மாதா பிதா குரு தெய்வம்

பலனை எதிர்பாராது எங்களுக்காக பாடுபடுபவர்களை நாங்கள் தெய்வமாக மதிக்கிறோம். உயர்திரு ராஜமனோகரன் அவர்களும் சிறுவர்களாகிய எங்களுக்கு சைவ சமயத்தைக் கற்பிக்கும் குருவாக இருக்கிறார். குரு— தெய்வம்.

ஈழவள நாட்டுச் சைவச் செம்மல்களாக அருணாசலம் பொன்னம்பலம் முதலியார், சேர் பொன்னம்பலம், இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர் அருணாசலம் மகாதேவா ஆகியோர் விளங்கினார்கள். இன்று இந்த லண்டன் மாநகரிலே தமிழையும் சைவத்தையும் சிறுவர்களாகிய எங்களுக்கு கற்பித்து வரும் உயர்திரு ராஜமனோகரன் அவர்களும் லண்டன் நாட்டுச் சைவச் செம்மலாக விளங்குகிறார்.

அருள்மிகு ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆரம்பித்த இச்சைவத் தமிழ்க் கலைக்கூடம் செழித்தோங்க உயர்திரு ராஜ மனோகரன் செய்யும் பணிகள் போற்றுதற்குரியதாகும்.



வாழ்க சைவமும் தமிழும்
வாழ்க அவர் தொண்டு

பிரஷாந்தினி சாந்தகுமார்
சமய வகுப்பு மாணவி

# சிறீ கனகதுர்க்கை அம்மன் ஆலய சைவ சமய வகுப்பு

"உண்மைச் சமய அறிவு வளராமல் வெளிநாடுகளில் எமது கோவில்கள் நிலைக்கமாட்டா"

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 4.00 மணி தொடக்கம் 5.45 வரைக்கும் அம்மன் சந்நிதியிலே சைவ சமய வகுப்புகள் நடைபெறும்.

**மேலதிக விபரங்களுக் கோவில் நிர்வாக சபை அல்லது**

க.இராஜமனோகரன் BSc Eng. M.I.E.Aust.: M.Inst.Pet (Lon)
டொக்டர் ச.இராஜமனோகரன் M.B.B.S; M.R.C.P (UK) Dip.G.U.M; DFFP.
திருமதி வி.பரமகுமரன் N.N.E.B

**Tel: 0181 810 0835, 0118 932 1438, 0181 900 1279**
**5 Chapel Road, West Ealing, London W13 9AE**

## ஞாயிற்றுக்கிழமை மாலை

| நேரம் | செயல்வகை |
|---|---|
| 4.15 — 4.30 | தமிழ் அறிதல் |
| 4.30 — 5.00 | சைவம் உணர்தல் |
| 5.00 — 5.05 | வழிபாட்டு முறை தெரிதல் |
| 5.05 — 5.10 | ஒழுக்கம் பேணல் |
| 5.10 — 5.30 | திருமுறை ஓதல் |
| 5.30 — 5.45 | சமயப் படம் பார்த்தல் |
| 5.45— 6.00 | வழிபாடு இயற்றல் |
| 6.00 — 6.15 | உணவு பரிமாறல் |

**முக்கிய குறிப்புக்கள்**

வகுப்புக்கள் இலகு தமிழிலே நடைபெறுமாயினும் தேவையான இடங்களிலெல்லாம் ஆங்கிலம் பயன்படுத்தப்படும். ஆகவே 'தமிழ் தெரியாது' என்று எண்ணி வராமல் விட வேண்டாம். சைவத்தோடு தமிழையும் கற்கும் அரிய சந்தர்ப்பம் இது.
ஒரு கல்லில் இரண்டு மாங்காய்!
சைவ சமயத்தைப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்குமளவு அறிவு பல பெற்றோருக்கு இல்லை. எனவே, பெற்றோரும் பிள்ளைகளோடு உள்ளே வருக; வீட்டிலே மீட்டலிற்கு இது உதவும்.
காலவரையறை (நேரக் கட்டுப்பாடு) மிக முக்கியம்
கோவிலிலே இடம் போதவில்லை என்னும் நிலை ஏற்படுமளவிற்கு அனைவரும் வருக!!

# ORIGINAL SAIVAISM AS EXPOUNDED BY TIRUMOOLER

President
Tirumooler Sangam

The Saiva Sidhanta doctrine was formulated by Tirumooler by his works Tirumantiram. Tirumooler is one of the eight disciples of Nandi known as Nandeeswaran in South India and as Nandikeswaran in North India. The BULL, the symbol of Nandi is installed in every temple and a pooja is performed daily after the pooja to the presiding Deity. The BULL represents the ATMA, the life force which is always on the run in all bodies. In some temples, particularly in South India the BULL has been hewn from large granite rocks and placed in temples to signify its importance.

Tirumooler himself has revealed in one of his verses that Sanather, Sananthaner, Sanathaner, Sanatkumar, Sivayoga mamuny, patanjali and Viyakramer are the other seven disciples of Nandi. He also says that they were all sent in eight directions after attainment of spiritual wisdom. Tirumooler came to Tamil Nadu and wrote 3000 verses of Tirumantiram to explain to the Tamil people, the doctrine of Saiva Sidhantam, Patanjali who is remembered throughout India and abroad by seekers of TRUTH wrote two books namely Maha Bashye and Yoga Sutra in Sansrit, some of his writings were translated into English. As Tirumooler and patanjali received instructions from the same satguru Nandi their revelations and the path to realize the eternal Truth are same. The path is through the knowledge of SELF which is Atma within the body. The Atma Chakkaram in its movement within the body speaks a subtle Word. The Bible says that in the beginning was the Word, the word was with God, the Word was God. In order to identify and realize this WORD Tirumooler and Patanjali divided it into five letters Aharam, Eharam, Uharam, Ongaram and Maharam. Tirumooler called it Aintheluthu Mantiram and Patanjali referred to is as Pancha-Akshara Mantiram meaning five letters, Vedantam refers to the Atma Chakkaram before division into five letters and Sidhantam refers to it after the division. There is no difference between Vedantam and Sidhantam as they both relate to the same Atma Chakkaram. Tirumooler says, *வேதாந்தம் சிந்தாந்தம் வேறிலா முத்திரை.*

Thirumooler himself has said that ignorant people try to find a difference between the two to enter into unnecessary arguments. It is because Saivagnanpotham is not Saiva Sidhantam. The doctrine enunciated by Tirumooler is different from that of Sivagnanapotham which was written by meikandar during the middle ages, and it is often mistakenly considered to be the basic text of the Saiva Sidhanta Philosophy. Meikandar himself says that he is a follower of Sanatkumar and Nandi. He says,

*எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய்*
*நந்தி உரைத்தருளும் ஞான நூல் சிந்தை செய்து*
*தானுரைத்தான் மெய்கண்டான்*
*தரணியோர் தாமுணர*
*ஏது திருட்டாந்தத்தால் இன்று.*

Although most of the educated Saivites are aware that Tirumantiram is their Scripture, they do not make an effort to study and understand the directions given therein to realize the Reality behind our existence in this universe. They do not even investigate as to when the Saivite Religion was introduced into this world. According to records left behind during the Middle Ages Tirumantiram remained hidden under the pelipeedam at Thiruvavadudurai temple and it was discovered by the father of Tirgnanasampanthar Nayanar. It has to be stated that Cidamparam the first temple was built about 1000 years ago. Whereas Tirumantiram according to reliable evidence available in the English translations of North Indian text was written 8000 years ago.

P.Ramanathapillai Kalaga pulaver and pundit of Saiva Sidhanta works of South India, who has published Tirumantiram in two volumes with commentaries has correctly given evidence to say that Tirumooler lived during the time of Rama, about 8000 years ago. Rama's royal preceptor was Vashister Muniver. Viyakramer one of the disciples of Nandi and colleague of Tirumooler is said to have married Anusooya a sister of Vashister Muniver.

Swami Prabhavananda of Rakakrishna Mission in his book 'The upanishads' states under chandogya Upanishad that Sanatkumar a colleague of Tirumooler, revealed the eternal Truth of Self, the Atma within, to Naradhar. What took place between Naradhar and Sanatkumar is reported as follows.

"Narada once came to sanatkumara and asked to be taught. TGo sanatkumars's question "What have you already studied? Narada replied that he had studied all the branches of learning - art, science, music and philosophy, as well as the sacred scriptures. But said he "I have gained no peace. I have studied all this, but the Self I do not know. I have heard from great teachers like you that he who knows the self overcomes grief. Grief is ever my lot. Help me, I pray you, to overcome it." Sanatkumara said "Whatever you have read is only name. Meditate on name as Brahman. Brahman's name is the unspeakable panchachara Mantiram the subtle five letter word."

In order to ascertain, even roughly the ear when Nandi and his disciples lived, further evidence is available in Srimad Bhagvata, Skanda 4. Daksha, one of the sons of Brahma went to the abode of the gods in connection with the performance of a sacrifice. Wvery one present stood up to receive him except Brahma and Siva. Daksha, abused Siva for his insulting and rude behaviour, adding that he would no more get his sacrificial offerings along with other gods.

Siva left the assembly without uttering a word. Nandikeswara (Nandeeswaran) however cursed Daksha to lose his head and get instead the head of a Goat. Turning to the Brahmins, he condemned them to be beggars as they did not understand the inner meaning of the Vedic teaching and stuck to rituals, making a trade of the sacred trust.

It is clear from this story that Nandi was regarded as a contemporary of Saiva, Brahma and his son Daksha, in the first order of creation. It is therefore a blasphemy and distortion to say that Nandi and his eight disciples including Rirumooler lived after Jesus Christ.

The doctrine of Saiva Siddhantam expounded by Tirumooler is anterior to all the known religions of this word. The doctrine of Vedantam as expounded in the four Vadas Rirg, Yajur, Sama and Adharvana and in the Upanishas is not different from Saiva Siddhantam except in very minor details. Some parts or the Vedas, Upanishads, Pathanjali's Yoga Sutra, Bhagavat Gita and some ancient Sanscrit works by saints like kabir Das have been translated into English by eminent scholars like Rabindranath Tagore. These translations have helped a great deal to know the era Nandi lived. P.Ramanathapillai, Siddhanta Pandit who published Tirumantiram in two volumes has therefore correctly stated that Tirumantiram is 8000 years old.

There is only one scripture for each religion, Bible for Christians, Koran for Muslims, Buddha Dhamma for Buddhists, Bhagavat Gita for Hindus and Tirumantiram for Saivites. They have each a Founder, Jesus Christ, Prophet Mohamed, Lord Buddha, Lord Krishna and Nandeeswaran, the Satguru of Tirumooler. They have indicated a path for human being to follow in order to live a happy life in this world and to realize the TRUTH behind this mundane existence.
Thirumooler in his verse 1478 under sanmargam

சைவப் பெருமைத் தனி நாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்று உண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையகத்துள்ளார்க்கு வகுத்து வைத்தானே,

Nandi is the one and only Nayakaya (Lord) for the greatness of Saivaism. For the redemption of man there is a path Guru Neri which he formulated. It is a path leading to relization of THUTH (Siva). He formulated this holypath for the people living in this world, to achieve liberation. I shall repeat the verse again.

What existed millions and millione of years ago before the Universe came into existence is Bindu (Vindu). It is (static) energy millions of times forceful and powerful than the atom. From it emanated (kinetic) energy called Nadam. Bindu in colloboration with Nadam areated a chakkara, a wheel which tirumooler and patanjali plotted into five letters. This energy concentrated chakkara created the universe and all that it contains. This revelation is in accord with the BIG BANG theory of Astrophysicists. The chakkara the wheel of five letters which is the product of Bindu and Nadam is the wheel of life force within all living beings. This wheel while revolving within the body recites a subtle word AUM. It cannot be uttered by the mouth and it is what is called MANTIBAM. Tirumooler says in verses 1280 & 85.

விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கரமாக
விளைந்த எழுத்தவை மெய்யினில் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திரமாமே.

He further says,
நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைபொருள் சொல் குவன்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தானே.

The Atma chakkara within all bodies recites the Word Aum and that is what sages and saints have described as SELF. The Upanishads say that Atman in sanscrit means God within. The vedas Bhagawat Gita, Tirumantiram and other works of ture sages, yogies and jnanies have unequivocally stated that knowledge of the self is the gateway to realize the TRUTH, God.

*

East Ham இல் தமிழர்களின் மாபெரும் புடைவைக் களஞ்சியம்

Rani Fashions

*Specialist in Wedding Sarees, Suits, Children Wears*



எங்களிடம் திருமணத்திற்கான
சிறந்த கூறைச் சேலைகள்
காஞ்சிபுரம், அபூர்வா, றங்கோலி, கோலம்,
மற்றும் Cotton,
Polyester சாறிகள், பிளவுஸ் துணிகள்,
சுடிதார், குழந்தைகளுக்கான ஆடைகள்,
மற்றும் Imitation Jewelleries Ect.
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**302 High Street - North , Manor Park, London E12 6SA**
**Tel/ Fax: 0181 472 9970 Mobile: 0958 504 118**

# MARKANDAN & CO

## SOLICITORS

**LEGAL AID**

***Empowered to Administer Oaths***

Legal Aid

**THAMIL HOUSE**
**720 ROMFORD ROAD**
**MANOR PARK, LONDON E12 6BT**

## M. MARKANDAN LLB

* All aspects of immigration matters from appeals to European court of human rights
* All types of conveyancing* Litigation * All courts civil/criminal
* Landlords/Tenant matters * Matrimonial * Police station advice
* All D.S.S and housing benefit matters
*Free advice for 15 minutes on the first attendance

**TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303**

# RASAM GAYATRI SILKS

## ராசம் காயத்திரி சில்க்ஸ்

**312 High Street North, Eastham - London E12.**



நவீன ரக கூறைச்சேலைகள் - காஞ்சிபுரம்.
றங்கோலி. கோலம். அபூர்வா., மிலேனியம்
டிசைனர் சில்க்சேலை Daksnotree
பட்டுவேட்டி-குர்தா-பஞ்சாபிகள்- பரதநாட்டிய
உடைகள் - மெட்டி - கொலுசு,
சேலை எடுப்பவர்களுக்கு பிளவுஸ் - துரித சேவை
காலத்திற்கேற்ப மாறும் Golden Tissue - Double
Gold Tissue - Jari Tissue Sarees
சிறுவர்களுக்கான அமெரிக்க - சிங்கப்பூர் உடைகள்
யாவுக்கும் புதியஇடத்தில் புதிய பொலிவில்

**Rasam Gayatri Silks**
**Tel: 0181-552 6060**


P.S. Ragu

# WELCOM CENTRE
# STAR MUSIC

தரமான ஒலி ஒளிகள்

FOREVER AND EVER GOOD QUALITY

OPEN 7 DAYS A WEEK
11.00AM-11.00PM





திரை, இசை நட்சத்திரங்களின்
புதிய- பழைய திரைப்படப்
பிரதிகளையும், சீடி, சீடி வீடியோ,
ஓடியோக்களையும், வார மாத தமிழ்,
ஆங்கில பத்திரிகைகள்,
சஞ்சிகைகளையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

TEL: 0181 552 2727 / FAX: 0181 692 7759

209 HIGH STREET NORTH, EAST HAM, LONDON E6 1GH

TEL: 0181 472 6084

247, HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6SJ


SML
Royal Jewelry
* மனம் கவரும் தங்க நகைகள்
*தங்கம் - கரட் உத்தரவாதம்
*தாலி - பொன்னுருக்கல் வசதிகள்
*உங்கள் தேவைகளுக்கேற்ற
வண்ணம் நகைகள் பிரத்தியேகமாய்
தயாரிக்கும் வசதிகள்
* சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின
மோதிரங்கள் ஓடர்களுக்குச்
செய்து கொடுக்கப்படும்
புன்னகைக்கு
நிகர் எங்கள்
பொன்னகையன்றோ!
வாருங்கள்
வந்து பார்த்து
வாங்குங்கள்!!
287, High Street North, East Ham, Manor Park, London E12 6SL
Tel: 0208 472 5500

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை

Specialist in 22 ct. Gold Jewellery

# Western Jewellers



**Creates the New Woman**

230 UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW

**Tel : 0181 767 3445**

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்


---


சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைக்கப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 01.01. 2000 அன்று ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் வெளியிடப்பட்டது.